முஹர்ரம் 1441 | செபடம்பர் 2019

# இமாமின் குரல்

## ஜமாத் - நியூஸ் லெட்டர்




بسم الله الرحمن الرحيم

لا إله إلا الله محمد رسول الله

إن الدين عند الله الإسلام

## ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம்

தமிழ்நாடு

மலர் 1 இதழ் 1

# இமாமின் குரல்



## இதழின் உள்ளே


அல்-அஸீம் தஃப்ஸீருல் குர்ஆன் பக்கம் -5

தஃப்ஸீரே கபீர் பக்கம் -8

நபி மொழி -ஒரு உயிரோட்டம் பக்கம் -10

இமாம்களின் இமாம் நபியே கரீம் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்கள் பக்கம் -11

ஒரு கலீபஃத் துல்லாஹ்வின் தோற்றம் பக்கம் -15

இஸ்லாத்தின் கடமைகள் யாவை பக்கம் -19

நம் இறைவன் பேசக்கூடியவன் பக்கம் -22

இரத்த சந்திரன் இறைவனின் மாபெரும் அத்தாட்சி பக்கம் -24


### தொழுகையில் இன்பம்

"சுவைத்து மனிதன் இன்புறுகின்றான். அழகிய பொருள்களைக் கண்டு இன்பம் அடைகின்றான். இனிமையான ஓசைகளைக் கேட்டு மகிழ்ச்சி அடைகின்றான். இவ்வாறு எல்லாவற்றிலும் இன்பம் இருக்கிறது என்றால்,வணக்கத்தில் மட்டும் எப்படி இன்பம் இல்லாமற் போய்விடும்?"

உள்ளே..........



# ஆசிரியர் பக்கம்

بسم الله الرحمن الرحيم

## EDITORIAL

My dear brothers & sisters in Islam,

السلام عليكم ورحمة الله وبركاته

Humanity is a feeling that makes us treat all our fellowmen kindly. It allows us to be humane to all men, even the poorest. This rule of decency is one of the great principles of Islamic perception.

A good action in Islam tilts all the scales in favour of the Muslim. It shows gratitude for the profusion of the waves of the grace of Allah (swt) that keeps on flowing over humanity and other creatures with every blink of the eye, every step and every moment.

Humanity when moving towards its Unique Master, disengages itself from this huge mass of masters and bosses. It certainly frees itself from the insupportable misguidance and arbitration.

However, it seems utterly absurd and laughable that people are unanimous in recognizing Allah (swt) as the Creator of the world while engaging in the worship of matters or other masters who rule their lives in a mixture of the true and the false.

The Muslim nation is heir to prophets and divine messages. It is the guardian of this heritage and is guided by the procession of faith on earth until the end of time.

The Jamaat Ul Sahih Al Islam firmly believes in the unity of humanity, the union of messages and the unity of Allah. It is for this reason that it is free from the abject intolerance which it may have had towards other religions. It firmly believes that Allah (swt) lavishes His blessings on all mankind. This is why Allah deserves all praise from the beginning to the end. This is the basic rule of Islamic design.

The Jamaat Ul Sahih Al Islam is the only diligence of love and compassion for the heart and the human conscience. It is a source of sincere fraternity which cannot admit other criteria of nobility than that of piety.

God in His great wisdom created man for a definite purpose: that he recognizes His existence and adores Him. To guide humanity towards this goal, He has always raised prophets among the different peoples of the world, and through them He has sent His teachings to men.

However over time, the religions underwent some changes either to suit the new customs or by forgetfulness. This is how the differences in the teachings of religions began, and all these teachings – in their pristine form – originated from one source, God. These innovations even influenced the main doctrine of all religion which is the oneness of God.

Would God ever leave men to their ignorance? God, the Gracious, cannot leave us in such decadence. God has continually sent His Messengers to men to revive true religion. The development of communication in the world announced a new stage of religion. The reunification of all religions into one universal religion that God called Islam, the Sahih Al Islam.

God has also promised to send in every century an Imam to revive Islam because the possibility that the teachings are misinterpreted or outright discarded remains. We, the Jamaat Ul Sahih Al Islam are witness to the fulfilment of this promise. We are the living example of this promise, Alhamdulillah.

The Voice of the Imam of this era has reached you today. May God Almighty – Allah (swt) – guide you to the understanding of this vital truth for the revival of mankind and for your own good. All for the sake of Allah. Insha-Allah.

**Munir A. Azim**

**Hazrat Imam Muhyi-ud-Din Al-Khalifatullah**

**Jamaat Ul Sahih Al Islam**

**27 September 2019**

**இன்ஷாஅல்லாஹ் அருளுக்குரிய இந்த செய்தியின் தமிழாக்கம் அடுத்த இதழில்**

# வாழ்த்துரை

**அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்விற்கே புகழனைத்தும்.**
**அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துள்ளாஹி வபரக்காத்துஹூ,**

அவனது அன்பும் அருளும் கருணையும் சாந்தியும் சமாதானமும் ஏந்தல் எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அன்னாரை பின்பற்றிய நேர்வழி பெற்ற கலீபாக்களின் மீதும் சீர்திருத்தவாதிகள் மீதும் உண்டாவதாக!

இன்னும் கடந்த நூற்றாண்டின் முஜத்தித் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மிர்ஸா குலாம் அஹ்மத் அலைஹிஸ்ஸலாம் மற்றும் இந்நூற்றாண்டின் "முஜத்தித் மற்றும் கலீஃபத்துல்லாஹ்" முனீர் அஹ்மத் அஸிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் இந்த உம்மத்தின் மீது எந்த அளவுக்கு கருணை கொண்டிருந்தார்களோ அந்த அளவிற்கு அல்லாஹ் அருள் புரிவானாக ! ஆமீன்..

2017 நவம்பர் மாதம் வெறும் நான்கு நபர்களால் துவங்கப்பட்ட ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம் என்ற ஜமாஅத் இன்று தமிழகத்தில் மூன்று கிளைகளுடன் ஐம்பதற்கும் மேற்பட்ட இறைநேசர்களுடன் இறைதிருப்தியை நோக்கி செல்கின்றது . அல்ஹம்துலில்லாஹ்....

அல்லாஹு தஆலா திருக்குர்ஆனில்

**எங்கள் இறைவா! உங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்ற நம்பிக்கையின் பக்கம் அழைப்பவரின் அழைப்பைக்கேட்டோம் . எனவே நாங்கள் ஈமான் கொண்டோம் ; (எனவே) எங்கள் இறைவா! எங்களுக்கு எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக எங்களுடைய தீமைகளை எங்களை விட்டும் அகற்றுவாயாக; எங்கள் உயிரை நற்சான்றோர்களுடன் கைப்பற்றுவாயாக! - என்று கூறுகின்றான்.**

இதில் எல்லாம் வல்ல இறைவன் கூற வருவது என்னவென்றால் நீங்கள் இறைவனை மறந்து விடும்போது அல்லது இறைவனை மதிக்க வேண்டிய விதத்தில் மதிக்காத போது அளவற்ற அருளாளனான இறைவன் அவன் பக்கம் அழைக்கும் தனது பிரதிநிதியை அனுப்பி காலத்தின் வழிகேட்டை சுட்டிக்காட்டி சீர்திருத்தம் செய்கிறான்.இதையே நாம் நபிமொழியில் பார்க்கும்போது "**ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒரு முஜத்திதை (சீர்திருத்தவாதியை) அல்லாஹ் அனுப்புவான்.**"(சுனன் அபூ தாவுத்) மற்றொரு நபிமொழியில் "இமாமைப் பற்றி பிடித்துக் கொள்ளுங்கள்."(புகாரி) என்று வருகிறது. மேலும் பிற்காலத்தில் வரக்கூடிய நுபுவ்வத்தின் பணியை சுட்டிக்காட்டும் பொழுது நற்செய்தி கூறுகின்ற நுபுவ்வத் எஞ்சியிருக்கிறது (புகாரி) மேற்கூறப்பட்ட திருக்குர்ஆன் மற்றும் நபி பெருமானாரின் வாக்குறுதியின் மூலம் நாம் அறிவது என்னவென்றால் உயிருள்ள இறைவனின் பால் மக்களை அழைத்து அவன் பக்கம் ஒன்று சேர்க்கின்ற பணியை இறைவன் தன்னால் தேர்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமே செய்கின்றான். அதனடிப்படையில் இவ்வுயர் பணியை செய்வதற்காக இக்காலத்தில் இறைவனால் அனுப்பப்பட்ட மொரீஷியஸ் நாட்டைச் சார்ந்த முனீர் அஹமத் அஸிம் (அலை) அவர்கள் தன்னை இந்நூற்றாண்டின் முஜத்திதாகவும், உம்மத்தி நபியாகவும் இமாமாகவும் எல்லாம் வல்ல அல்லாஹ் தன்னை தேர்ந்தெடுத்துள்ளதாக கூறினார்கள். அதற்கு சான்றாக திருக்குர்ஆன் ஹதீஸ் மற்றும் வானத்தின் அடையாளங்களை காட்டினார்கள்.இவ்வுயர் நோக்கத்தை பூர்த்தி செய்யும் வகையில் "இமாமின் குரல்" என்ற ஜமாஅத்தின் செய்தி மலரை தமிழக ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம் தமிழக கிளை சார்பாக மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறது. இதற்காக தியாக உணர்வுடனும் கடின உழைப்பையும் தந்த கலீஃபத்துல்லாஹ் அவர்களின் சஹாபாக்களான பத்திரிகைத்துறை அன்பர்களுக்கும் உதவி செய்து துஆ வும் செய்த அனைவருக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்புரிவானாக. மேலும் இம் மகிழ்ச்சியான தருணத்திலே அனைவருக்கும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் ..ரப்புல் ஆலமீன் அ. வஸ்ஸலாம் ..

**இப்படிக்கு,**
**சிராஜுதீன்**
**அமீர்**
**ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம்**
**தமிழ்நாடு**

# அல்-அஸீம் தஃப்ஸீருல் குர்ஆன்





புனிதத்திருமறையின் ஸூரா அல்-ஹிஜ்ர் 10 வது வசனத்தில் அல்லாஹ் சுபஹானஹுதாஆலா



**إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ**

**இந்த (குர்ஆனாகிய) அறிவுரையை நாமே இறக்கினோம். நிச்சயமாக நாமே இதனை பாதுகாப்போம்.**

உறுதியளித்தது போல் அதன் எழுத்துக்களை மட்டுமல்லாமல் அதன் உண்மை கருத்தையும் (ரூஹையும்) பாதுகாக்கின்றான். மேலும், இந்தப்பணியை ஒவ்வொரு நேரத்திலும் முஸ்லிம்களில் இருந்து இறைவனால் எழுப்பப்படும் மார்க்க சீர்திருத்தவாதிகள் மூலம் செய்கின்றான். இந்த மார்க்க சீர்திருத்தவாதிகளை இஸ்லாமிய சொல்வழக்கில் **"முஜத்தித்கள்"** என்று அழைக்கப்படுகின்றார்கள். இவ்வாறு இறைபுரத்திலிருந்து தோன்றும் முஜத்தித்மார்கள் இறைவனிடமிருந்து **வஹீயை** பெற்று திருக்குர்ஆனின் வார்த்தைகளுக்கு உண்மையான மற்றும் விரிவான விளக்கத்தை வழங்குகின்றனர். இவ்வாறு தோன்றும் முஜத்தித்மார்கள் மற்ற மார்க்கத்திலும் அந்த மார்க்கத்தின் வேதம் அதை பின்பற்றுபவர்களுக்கு வழிகாட்டும் வரை வந்து கொண்டிருந்தார்கள்.ஆனால் எப்போது இஸ்லாம் தோன்றிவிட்டதோ அதற்கு பிறகு மற்ற அனைத்து மார்க்கங்களும் மற்றும் வேதங்களும் முடிவுக்கு வந்து விட்டன. ஏனென்றால் அவை அனைத்தும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காக அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்திற்க்காக அருளப்பட்டிருந்தது. எனவே இங்கே முஜத்தித்மார்கள் தோன்றுவது முடிவுக்கு வந்துவிட்டது. மேலும் திருக்குர்ஆன் ஒன்றே இப்போது உலகப்பொதுமறையாக ஓர் வாழும் வேதமாக உள்ளது. எனவே இறைவனிடத்திலிருந்து தோன்றும் இத்தகைய மார்க்க சீர்திருத்தவாதிகள் ஆகிய முஜத்தித்மார்கள் இஸ்லாமிய மார்க்கத்தில் மட்டும் தோன்றிக்கொண்டேயிருக்கின்றார்கள். இவ்வாறே நாம் வாழும் காலத்தில் இறைவனால் 15 வது நூற்றாண்டில் முஜத்தித்தாக எழுப்பட்டவரே **ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம் (அலை)** அவர்கள்,அன்னார் இந்த நூற்றாண்டின் இறைவஹீயின் மூலம் திருகுர்ஆன் விளக்கவுரையை அல்-அஸீம் தஃப்ஸீரூல் குர்ஆன் என்ற பெயரில் 23 பாகங்களாக எழுதியுள்ளார்கள்.அல்ஹம்துல்லாஹ் ,இந்த இதழில் மூலம் இந்த நூற்றாண்டின் அருளுக்குரிய வரலாற்று சிறப்புமிக்க அல்-அஸீம் தஃப்ஸீரூல் குர்ஆன் வெளியிடுவதில் பெரு மகிச்சியும் அடைவதோடு படிக்கும் மக்கள் அந்த ஏக இறைவனின் நெருக்கத்தை பெற துஆ செய்கின்றோம்

"இவ்வாறு இறைபுரத்திலிருந்து தோன்றும் முஜத்தித்மார்கள் இறைவஹீயை பெறுகின்றனர்"



# அல்-அஸீம் தஃப்ஸீருல் குர்ஆன்

**மொழியாக்கம் -சிராஜ்மக்கின் -ஃபாஹிமா சாஹிபா அவர்கள்**

## சுயசரிதை-குறிப்பு

மொரீசியஸை நாட்டை சேர்ந்த ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் அவர்கள், ஜனவரி 07, 1961 அதாவது ஹிஜ்ரி 1380 ரஜப் மாதம் 19ம் நாள் பிறந்தார்கள்,மேலும் அன்னார் சர்வதேச ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம் என்ற ஜமாஅத்தின் புனித தோற்றுனர் ஆவார்கள்.ஒரு சாதாரணப் பொருளாதார வளமும், ஆழந்த ஆன்மீக ஈடுபாடும், மற்றும் சேவை மனப் பான்மையும் கொண்ட ஒரு முஸ்லிம் குடும்ப த்தைச் சார்ந்த முனீர் அஹ்மது அஸீம் அவர் களின் காலம் சென்றப் பெற்றோரான மர்ஹூம் ஸாலிம் அஸீம் ஸாஹிப் மற்றும் முஹ்மின் அஸீம் ஸாஹிபா ஆகிய இருவரும் மிகுந்த பயபக்தியுடைய முஸ்லிம்களாக இருந்தனர்.

மேலும், அன்னார் இளம் வயதிலேயே மிகுந்த மார்க்கப்பற்றும், ஆன்மீக ஈடுபாடும் கொண்டப் பின்னணி வளர்ந்ததார்கள், இஸ்லாமிய ஆய்வுகளில் அசாதாரண ஈடுபாடும்,முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களின் மார்க்க விவாதங்களில் மிகுந்த ஆர்வமும் காட்டி வந்தார்கள். மேலும் ,அன்னார் தனக்கு வாய்ப்பு வழங்கப்படும் போதெல்லாம், தன்னுடைய அபாரமான வாதத்திறமையின் காரணமாக, இஸ்லாத்தின் மதிப்பையும், அதன் போதனை களையும் பாதுகாப்பதில் மிகத் திறமையுடன் செயல்பட்டார்கள். இத்தகைய திறமையான ,தனித்துவமிக்க , முழுமையான பண்புகளும் மற்றும் ஆழ்ந்த ஆன்மீக ஞானமும் பெற்றதன் விளைவாக, பல்வேறு சமுதாயங்களுக்கும் ,இந்த தீவுதேசத்தில் மட்டுமன்றி மொரீசியஸின் வெளிப்புறப்பகுதிகளுக்கும் இன்னும் இறுதி யில் அன்னாரை இஸ்லாத்தின் தூதராகவும் ஆக்கப்பட்டார்கள். மேலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்டவைக்கும் பணியில் அவருடைய ஆழமான அர்ப்பணிப்பையும், மற்றும் மேன்மையான சேவைகளையும் அன்னார் செய்து கொண்டு வருகின்றார்கள் ,மேலும், இஸ்லாமிய உலகின் நம்பிக்கையை பொறுத்தவரை ,அல்லாஹ், திருகுர்ஆனில் பாதுகாக்கப்பட்ட ஆழமான நுட்பத்தையும், என்றும் அழியாத தன்னுடையப் போதனை களை விளக்கி கூறுவதற்காகவும், ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஸ்லிம் சமுதாயத் திற்கு ஒரு சிறந்த வாழும் முன்மாதிரியை ஏற்படுத் துவதற்காகவும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஆன்மீக சீர்திருத்தவாதிகளை எழுப்புகின் றான் என்பதாகும். மேலும் முனீர் அஹ்மது அஸீம் சாஹிப் அவர்கள் ஆன்மீக ஈடுபாட் டுடனும் மற்றும் மார்க்கப் பற்றுடனும் கூடிய ஒரு வாழ்க்கையை வாழ்த்து கொண்டிருக்கும் போது அன்னாரின் **40 வயதிலிருந்து இறைவஹீ வரத்தொடங்கியது.** மேலும் அந்த இறையறிவிப்பு எவ்வகையானது என்றால் அது இஸ்லாம் மற்றும் உலகின் எதிர்காலம் தொடர்பானதாகவும் மற்றும் ஆன்மீகம், மற்றும் பௌதீகம் தொடர்பான பல்வேறு விஷயங்களை உள்ளடக்கியதாகவும் இருந்தது.

இருப்பினும் அன்னாருக்கு இறங்கிய இறை வெளிப்பாடுகளை அன்னாரின் சமுதாய த்தினரால் மறுக்கப்பட்டு அன்னாரை ஜமா அத்திலிருந்து வெளியேற்றினர் அன்னாருக்கு நெருக்கமானவர்களே ஏற்றுக்கொள்ளாமல் அன்னாரை அமைப்பிலிருந்து வெளியேற்றிய போதும், அல்லாஹ் அன்னாரை ஏற்றுக் கொண்டான்,மேலும் அவன் அன்னாருக்கு அவனது மறைவானவற்றின் ஞானத்தை கற்று க்கொடுத்து அந்த மேலான பொக்கிஷத்தை வாங்கினான்.

# அல்-அஸீம் தஃப்ஸீருல் குர்ஆன்

**மொழியாக்கம் -சிராஜ்மக்கின் -ஃபாஹிமா சாஹிபா அவர்கள்**

## சுயசரிதை-குறிப்பு

மேலும் அல்லாஹ் அன்னாரை கடந்த பத்து ஆண்டுகளில் படிப்படியாக ஆன்மீக நிலையை உயர்த்தி அன்னாருக்கு"'**கமரம்முனீரா' (வெளிச்சம் கொடுக்கும்சந்திரன்), கலீலுல்லாஹ்' (அல்லாஹ்வின் நண்பர்),'ஹஸ்ரத்', அமீருல் முஃமினீன் (முஃமின்களின் தலைவர்) ,' முஹையதீன்'(மார்க்கச் புதிப்பிப்பவர்),'முஸ்லியுத்தீன்'(மார்க்கச்சீர்திருத்வாதி),'முஜத்தித்(மார்க்கப்புதுப்பிப்பவர்),' முஸ்லீஹ் மவ்வூது' (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி) மற்றும் கலீஃபத்துல்லாஹ் (அல்லாஹ்வின் கலீபா) ' ......** போன்ற பதவிகளை வழங்கினான் மேலும், டிசம்பர் 2003ம் ஆண்டு, முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் தன்னுடைய இறைவெளிப்பாடுகள் தொடர்பாக பின்வருமாறு சூளுரைத்து கூறினார்கள்:

**"எனக்கு பணமோ பதவியோத்தேவையில்லை. மனித குலத்திற்கு எச்சரிக்கை செய்வதற்க்கு அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ் என்னை அனுப்பி வைத்துள்ளான். அவனிடம் இருந்து கிடைக்கும் தூது செய்தியை எட்டவைப்பது மட்டுமே எனது பணி. நீங்கள் இதை ஏற்று கொண்டால் இம்மையிலும், மறுமையிலும் உங்களுக்கு நிம்மதியும் சாந்தியும் கிடைக்கும். அல்லாஹ்வின் இச்செய்தியை நீங்கள் புறக்கணித்தால், எனக்கும் உங்களுக்கும் இடையில் அவனே போதுமானவன்.**

**இன்று முதல் நான் அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் சாட்சியாகக் கூறுகின்றேன்,இன்றுமுதல் நானே இந்த நூற்றாண்டின் முஹையதீன் ஆவேன்"**





**நான், அல்லாஹ்வை சாட்சியாக வைத்துக் கூறுகிறேன். 'நானே இந்த நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், நபியுல்லாஹ்வாகவும், கலிஃபத்துல்லாவாகவும் இருக்கின்றேன்.**

மேலும், எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால், சர்வதேச ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம் இன்று மொரீசியஸ், இந்தியப் பெருங்கடலைச் சுற்றியுள்ள தீவுகள், இந்தியா, டிரினிடாட் & டொபாக்கோ, மற்றும் ஜப்பான் போன்ற பல்வேறு நாடுகளில் கிளைகளைப் பரப்பியுள்ளது.

**இன்ஷாஅல்லாஹ் தொடரும்......**

# தஃப்ஸீரே கபீர்

**மொழியாக்கம் -ஸஹிப் அல் ஃபரஜ் -S.S.H Faisal சாஹிப் அவர்கள்**

## நபிமார்கள் வருவது இறுதி நாள் வரைத் தொடரும்

**வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி ஹஜ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத்(ரலி)**

**ஆதமின் மக்களே! என் வசனங்களை உங்களுக்கு ஓதிக் காட்டக்கூடிய தூதர்கள் உங்களிடமிருந்தே நிச்சயமாக உங்களிடம் வரும்போது, இறையச்சத்தை மேற்கொண்டு திருத்திக் கொள்வோருக்கு (வருங்காலத்தைப் பற்றிய) எவ்வித அச்சமும் ஏற்படாது; அவர்கள் (சென்ற காலத்தைப் பற்றிக்) கவலை அடையவும் மாட்டார்கள்.(7:36)**

ஹஜ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத்(ரலி) அவர்களின் குர்ஆன் விளக்கவுரையான தஃப்ஸீரே கபீர் -ல் வசனம் எண் 7:36க்கு இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்கள்:-

936. விளக்கவுரை :
இந்த வசனமும் இம்முந்தைய வசனங்களைப் போன்றே முக்கியமாக கவனிக்கப்படத்தகுந்ததாக இருக்கிறது (உ.ம் 7:27,28&32). "ஆதமுடைய மக்களே" என்று இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் வார்த்தைகள், முஹம்மது(ஸல்) அவர்களின் காலத்திற்குரிய மக்களுக்கும்,இன்னும் பிறக்காத (வருங்காலத்) தலைமுறைகளுக்கும் பொருந்துமேத் தவிர **கடந்த காலங்களில் வாழ்ந்த மக்களுக்கும்** ஆதமை நேரடியாகப் பின்பற்றிய (ஆதமுடைய) மக்களுக்கோ பொருந்தாது. இது எந்தக்கண்ணோட்டத்தில் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றால், மனிதகுலத்தின் எதிர்கால தலைமுறையினருக்குத் தெரிவிக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பலனாக, ஆதமுடைய மக்கள் இப்பூமியில் வாழும் வரை, இறைவனின் (புறமிருந்து) தூதர்கள் இவ்வுலகில் தோன்றிக் கொண்டேதான் இருப்பார்கள். இதனால், நபி (ஸல்) அவர்களை எதிர்ப்பவர்களாலும், அவர்களுக்கு எந்த வீழ்ச்சியும் வரப்போவதுமில்லை; (அதனால்) நபித்துவமும் நிற்கப்போவதுமில்லை .ஆதமின் காலத்தில், ஆதமின் சந்ததிகளுக்கு கொடுக்கப்பட்ட பெரிய வாக்குறுதியும் (2:39)****, அதனடிப்படையில்






"ஆதமுடைய மக்களே" என்று இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் வார்த்தைகள்,முஹம்மது (ஸல்) அவர்களின் காலத்திற்குரிய மக்களுக்கும்,இன்னும் பிறக்காத (வருங்காலத்) தலைமுறைகளுக்கும் பொருந்து மேத்தவிர கடந்த காலங்களில் வாழ்ந்து ஆதமை நேரடியாகப் பின்பற்றிய (ஆதமுடைய) மக்களுக்கோ பொருந்தாது.

அல்லாஹ்வின் தூதர்கள் எல்லா காலகட்டங்களிலும் பல்வேறு நாடுகளில் உள்ள வெவ்வேறு சமுதாயங்களிலும் தோன்றியதும் யுகமுடிவு நாள் வரை தொடர்ந்து நிறைவேறும். (இவ்வசனத்தின்), **"உங்களிடமிருந்து தூதர்கள் உங்களிடம் வந்தால்"** என்பதற்கு, இறைவனிடமிருந்து தூதர்கள் வரலாம் அல்லது வராமலும் இருக்கலாம் என்று பொருளல்ல. எதுபோல வென்றால், "என்னிடமிருந்து உங்களுக்கு நேர்வழி வந்தால்" (2:39) (என்ற வசனத்தின்) வார்த்தைகளுக்கும், என்னிடமிருந்து நேர்வழி வரலாம் அல்லது வராமலும் இருக்கலாம் என்பது பொருளல்ல. உண்மையில், 'ما' (என்றால்/ இருந்தால்) என்ற வார்த்தையின் நோக்கம்

# தஃப்ஸீரே கபீர்

**மொழியாக்கம் -ஸஹிப் அல் ஃபரஜ் -S.S.H Faisal சாஹிப் அவர்கள்**

## நபிமார்கள் வருவது இறுதி நாள் வரைத் தொடரும்

**வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி ஹஜ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத்(ரலி)**

**ஆதமின் மக்களே! என் வசனங்களை உங்களுக்கு ஓதிக் காட்டக்கூடிய தூதர்கள் உங்களிடமிருந்தே நிச்சயமாக உங்களிடம் வரும்போது, இறையச்சத்தை மேற்கொண்டு திருத்திக் கொள்வோருக்கு (வருங்காலத்தைப் பற்றிய) எவ்வித அச்சமும் ஏற்படாது; அவர்கள் (சென்ற காலத்தைப் பற்றிக்) கவலை அடையவும் மாட்டார்கள்.(7:36)**

என்னவென்றால், ஒரு தூதருடைய காலத்தில் நீங்கள் வாழ நேர்ந்தால், நீங்கள் அவரை ஏற்றுக்கொள்ளத் தவறிவிடாதீர்கள்! என்பதைக் குறிப்பதாகும்.எனவே, இந்த வார்த்தை காலத்தை முற்றிலுமாக (நாம்) நிர்ணயித்துவிடாமல் விட்டு விட வேண்டும் என்று பொருள்படும். (அதாவது) இறைவனின் தூதர், ஒரு தலைமுறையிலோ அல்லது இன்னொரு தலைமுறையிலோ தோன்றக் கூடும், ஆனால் (அவ்வாறு) அவர் தோன்றும் போதெல்லாம் அவர் (இறைத்தூதர்) ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்." என்னுடைய அடையாளங்களை உங்களுக்கு விளக்கினால்" என்ற வசனம் உணர்த்துகின்ற உண்மை என்னவென்றால், முஹம்மது (ஸல்) அவர்களுக்கு பிறகு வரும் தூதர்கள்யாவரும் எந்த புதிய சட்டத்தையும் (ஷரியத்தை) கொண்டு வரப்போவதில்லை, ஆனால் இஸ்லாத்தின் சட்டத்தை முழுமையாக பின்பற்றச் செய்வதற்கும், ஏற்கனவே அளிக்கப்பட்டிருக்கும் குர்ஆனின் வசனங்களை அவர்கள் விளக்கிக் கூறுவதற்கு அல்லது, ஓதிக்காட்டுவதற்கு (வருகைத்தருவார்கள்).

7:37. وَ الَّذِیۡنَ کَذَّبُوۡا بِاٰیٰتِنَا وَ اسۡتَکۡبَرُوۡا عَنۡہَاۤ اُولٰٓئِکَ اَصۡحٰبُ النَّارِ ۚ ہُمۡ فِیۡہَا خٰلِدُوۡنَ ﴿

**﴾மேலும் எம்முடைய வசனங்களை மறுத்து அகங்காரம் கொண்டு அவற்றை புறக்கணிப்பவர்கள், நரகத்திற்குரியவர்கள் ஆவர். அவர்கள் அதில் நீண்ட காலம் வரை தங்குவர்}**

937. விளக்கவுரை:இவ்வசனம் முஸ்லிம்களுக்கு ஒரு குறிப்பிட்ட எச்சரிக்கையை விடுக்கின்றது; அதாவது அவர்கள் அவர்களிடையே தோன்றப்போகின்ற தூதர்களை குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது, அவர்களை நிராகரிக்கவும் கூடாது. நிச்சயமாக இச்சட்டம் திருக்குர்ஆனில் மிகச்சிறந்த முறையில் கூறப்பட்டிருக்கின்றது. (ஆனால் அதற்கு பிற்கால இறைத்தூதர்களை நிராகரித்தாலும் தண்டனையிலிருந்து தவிர்ந்து கொள்ளலாம் என்று பொருள் கிடையாது. மேற்குறிப்பிட்ட வசனங்களின் விளக்கத்தின் அடிப்படையில் முஸ்லிம்களாகிய நாம் அனைவரும், இறைவனால் அவனது விருப்பப்படி, தான் தேர்ந்தெடுத்துள்ள காலகட்டத்தில், தான் தேர்ந்தெடுக்கின்ற தூதர்களை அனுப்பும்போது, கண்மூடித்தனமாக நிராகரிக்க முயற்சிக்காமல் அவனது இறைவேதத்தில் அவர்களுக்குரிய உண்மைத்துவத்திற்கு சாட்சியாக எதனைக்கூறியுள்ளானோ அவற்றை மட்டுமே அளவுகோலாகக் கொண்டு அவர்களை அடையாளங்கண்டு கொண்டு ஏற்றுக்கொள்வதில் முன்னணியில் நிற்கச் செய்வானாக!ஆமீன்!



**"ஒரு தூதருடைய காலத்தில் நீங்கள் வாழ நேர்ந்தால்,நீங்கள் அவரை ஏற்றுக் கொள்ளத்தவறிவிடாதீர்கள்!"**

****நீங்கள் எல்லாரும் இதிலிருந்து வெளியேறுங்கள் .என்னிடமிருந்து உங்களிடம் ஏதாவது நேர்வழி வருமாயின் எனது நேர்வழியினைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு (எதிர்காலம் பற்றிய) எந்த அச்சமும் இருக்காது. (இறந்த காலம் பற்றி) அவர்கள் துயரம் அடைய மாட்டார்கள் என்று நாம் சொன்னோம்".-(அல்குர்ஆன் 2:39)

# நபி மொழி -ஒரு உயிரோட்டம்

ஸஹிப் அல் ஃபரஜ் -முக்தார்ருதீன் சாஹிப் அவர்கள்

**ஸஹீஹ் புகாரி அத்தியாயம் : 65. திருக்குர்ஆன் விளக்கவுரை ஹதீஸ் எண் 4897 மற்றும் 4898**

அறிவிப்பாளர்

அபூ ஹுரைரா(ரலி)

**நாங்கள் (ஒரு சமயம்) நபி(ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்போது அவர்களுக்கு 'அல்ஜுமுஆ' எனும் (62 வது) அத்தியாயத்தில் 'இன்னும் இவர்களுடன் வந்து சேராமலிருக்கும் ஏனைய மக்களுக்காகவும் (இந்தத் தூதரை அவன் அனுப்பியுள்ளான்)' எனும் (3 வது வசனம் அருளப்பெற்றது. அப்போது, 'அந்த (ஏனைய) மக்கள் யார்? இறைத்தூதர் அவர்களே!' என்று கேட்டேன். நான் மூன்று முறை கேட்டும் அவர்கள் (எனக்கு) பதிலளிக்கவில்லை. எங்களிடையே சல்மான்-அல்-ஃபாரிசீ(ரலி) இருந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் சல்மான் மீது தம் கரத்தை வைத்தார்கள். பிறகு, கிருத்திகை (ஸுரய்யா) நட்சத்திரக் குழுமத்தின் அருகில் இறைநம்பிக்கை இருந்தாலும் 'சில மனிதர்கள்' அல்லது 'இவர்களில் ஒருவர்' அதனை அடைந்தே தீருவார்' என்று கூறினார்கள்.**

**அபுல் ஃகைஸ் சாலிம்(ரஹ்) அறிவித்தார் அபூ ஹுரைரா(ரலி) அவர்களின் மற்றோர் அறிவிப்பில், 'இவர்களில் சில மனிதர்கள் இதனை அடைந்தே தீருவர்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இடம் பெற்றுள்ளது.**

மேற்கண்ட ஹதீஸின் படி இறுதி காலத்தில் தோன்றும் ஈசா மஸீஹ் பற்றியும் அவர்கள் கடந்த நூற்றாண்டில் பஞ்சாபில் தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களை அஹ்மதிகளாகிய நாம் ஏற்றுள்ளோம், இதில் கேள்வி என்னவென்றால் இவ்வாறு எழுப்பப்பட கூடியவர் ஒருவரா? அல்லது பலரா? என்பதாகும்

ஒருவர் என்றால் அது திருக்குரான் போதனைக்கு மாற்றமானதாகும்.

**இதற்கு முன்னர் யூஸுஃப் தெளிவான சான்றுகளுடன் உங்களிடம் வந்தார். ஆனால் அவர் உங்களிடம் கொண்டு வந்தது குறித்து நீங்கள் ஐயப்பாட்டிலேயே இருந்தீர்கள். அவர் மரணமடைந்த போது, அவருக்குப் பின்னர் எந்தத் தூதரையும் அல்லாஹ் ஒருபோதும் அனுப்பமாட்டான் என்று நீங்கள் கூறினீர்கள். இவ்வாறே அல்லாஹ், வரம்பு மீறுபவர்களாகவும், ஐயம் கொள்பவர்களாகவும் இருப்பவர்களை வழி தவறியவர்கள் என்று (முடிவு எடுத்துக்) கொள்கிறான்.(திருக்குர்ஆன் 40: 35 )**

எனவே பலர் அல்ல ஒருவர் என்பது கடைசி நபி கொள்கையின் மறு வடிவமே ஆகும்.ஹஜ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சமூகம் எல்லா சமூகங்களை விட சிறந்ததாகும் ஆனால் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களது உம்மத்தில் அன்னாரின் நிழலாக பலர் தோன்றி இருக்க கைருல் உம்மத்தான இந்த முஹம்மதிய்ய உம்மத்தில் ஒரே ஒரு மஸீஹ் தான் கியாமத் வரை என்றால் இது மூஸா (அலை) அவர்களது உம்மத்தை விட எந்த வகையில் சிறந்த சமூகம் என்பதற்கு இக்கொள்கையை கொண்டவர்கள் விளக்குவதற்கு கடமைப்பட்டுள்ளார்கள்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:-
நிழலான /பின்பமான மஸ்ஸிஹ்கள் ஆகப் பலர் வரலாம் -இதுவும் எனது தனிப்பட்ட கருத்தில்லை பெருமதிப்புக்குரிய நபிமார்களின் பரப்பரியத்தின் சாரம் இதுவே ஆகும்.கியாமத் நாள் வரை தஜ்ஜால்கள் வரமுடியும்.இவ்வாறு 30 தஜ்ஜால்கள் உலகில் தோன்றக்கூடும் **"லீ குல்லி தஜ்ஜாலின் ஈஸா "** என்ற நபி மொழிக்கு ஏற்ப குறைந்தது 30மஸ்ஸிஹ்கள் வருவார்கள். பிற மஸீஹ்கள் பின்வரும் காலத்தில் தோன்றுவார்கள். இவை அனைத்தும் நிச்சயம் சாத்தியமே.மேலும் அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வாதம் செய்பவன் நானே. ஆனால் நான் ஒருவனே மஸீஹ் என்றும் நானே முதலாவது மற்றும் கடைசி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் வாதம் செய்யவில்லை. என் பார்வையில் எனக்கு பிறகு 10000 க்கு மேற்பட்ட வாக்களிக்கப்பட்ட மஸீஹ்கள் வருவார்கள்,நான் இந்த காலத்திற்கு மட்டுமே மஸீஹ் ஆக உள்ளேன்.(Isaalaye Auhaam, p.197)

**"மஸீஹ் பலர் அல்ல ஒருவர் என்பது கடைசி நபி கொள்கையின் மறு வடிவமே ஆகும்"**

மேற்கண்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூற்றுக்கள் மஸீஹ் ஒருவர் அல்ல, பலர் என்று தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கும் போது இக்கால அஹ்மதிகள் இந்த கூற்றுக்களுக்கு என்ன மதிப்பளீத்தார்கள் என்பதற்கு அவர்கள் இதனை தன் முதுகிற்கு பின்னால் தூக்கி எறிந்து விட்டார்கள் என்பதே கசப்பான உண்மையாகும்.

**இந்த நபிமொழியின் உயிரோட்டம் அடுத்த இதழிலும் இன்ஷாஅல்லாஹ் தொடரும் ....**

# இமாம்களின் இமாம் நபியே கரீம்
## முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்கள்

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களுக்கும் இமாம் ஆவார். (முஸ்லிம் விளக்க எண். 278)

அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்; (பைத்துல் முகத்தஸில்) இறைத் தூதர்களில் ஒரு குழுவினர் இருந்தனர்... அப்போது (ஒரு) தொழுகையின் நேரம் வந்துவிடவே இறை தூதர்களுக்கு நான் தலைமை தாங்கி தொழுகை நடத்தினேன்

நபிமார்களின் நாயகர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என இப்னு கஸீர் கூறுகிறார். பைத்துல் முகத்தஸில் எல்லா நபிமார்களும் கூடினர். அப்பள்ளியில் நபி (ஸல்) அவர்கள் அவர்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடத்தினார்கள். இது அவர்கள் அனைத்து நபிமார்களின் தன்னிகரற்ற தலைவர் என்பதைக் காட்டுகிறது என்று கூறுகிறார். (17:1 வசனத்தின் தப்ஸீர் இப்னு கஸீரின் விளக்கம்) எல்லா நபிமார்களையும் விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேலானவர்கள் என்பதையே மிஹ்ராஜ் பயணம் காட்டுகிறது. நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஒவ்வொரு வானத்தையும் கடந்து 7 வானத்தையும் தாண்டி, சித்ரதுல் முன்தஹா வரை சென்று இறைவனுடன் உரையாடி வந்துள்ளார்கள். உலகில் தோன்றிய அனைத்து நபிமார்களும் தத்தமது தகுதிகளுக்கு ஏற்ப 7 வானங்களில்தான் உள்ளனர். ஆனால் நபி (ஸல்) அவர்களோ அனைத்து நபிமார்களின் ஆத்மீக பதவி களாகிய 7 வானத்தையும் தாண்டி சித்ரதுல் முன்தஹா சென்றுள்ளார்கள். பூமியில் நின்று ஒருவர் வானத்தைப் பார்த்தால் 7 வானங்களிலும் அனைத்து நபிமார்கள் இருப்பதையும் அவர்களையும் தாண்டி இறுதி எல்லையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இருப்பதையும் காணலாம். இப்பதவி நுபுவத்தின் இறுதிப் பதவியாகும். காத்தம் எனும் சொல்லை அடுத்து நபிமார்கள் எனும் பன்மைச் சொல் வந்தால் – நபிமார்களுள் காத்தம் என்று வந்தால் அரபி மொழி வழக்கிர்கேற்ப அதற்கு நபிமார்களுள் மிகச் சிறந்தவர் என்றே பொருளாகும். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையே காத்த முன்னபியீன் – நபிமார்களில் மிகச் சிறந்தவர் எனக் கூறுகிறான்.

இந்த பட்டம் வேறு எந்த நபிக்கும் தரப் படவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்கு முன்னர் வந்த எல்லா நபிமார்களுக்கும் இல்லாத 5 சிறப்புகள் எனக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. (புகாரி , முஸ்லிம், நஸயி)

.

1) ஒவ்வொரு நபியும் அவர்களின் கூட்டத்தினருக்கு மட்டுமே சொந்தமாக அனுப்பபட்டிருந்தனர். நானோ கறுப்பர், சிவப்பர் ஆகிய (மனித இனம்) முழுமைக்கும் அனுப்பப்பட்டுள்ளேன்.
2)போரில் கிடைத்த பொருள்கள் எனக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளன. எனக்கு முன்னர் அவை எவருக்கும் ஆகுமாக்கப்படவில்லை.
3)எனக்கு பூமி முழுவதும் துப்புரவாகவும், தொழு மிடமாகவும் ஆக்கி வைக்கப்பட்டுள்ளன. எனவே எவரேனும் தொழுகை நேரத்தை அடைந்து விடின் அவர் எங்கிருப்பினும் சரியே தொழுதுகொள்ளவும்.
4) ஒரு மாதப் பயணத் தூரதிற்குமிடையில் எதிரிகள் இருப்பினும் அவர்கள் எனக்கு அஞ்சி நடுங்கும் அளவுக்கு எனக்கு இறைவன் உதவி நல்கியுள்ளான்.
5)சிபாரிசு செய்யும் முதல் உரிமை (எனக்கு வழங்கப்பட்டுள்ளது)

திருக்குர்ஆன் 17:80 - இல் இதனால் உம்முடைய இறைவன் உம்மை புகழுக்குரிய இடத்திற்கும் (மகாமே மஹ்மூத்) உயர்த்தக் கூடும். இந்தப் பதவி வேறு எந்த நபிக்கும் இறைவன் வழங்கவில்லை.

திருக்குர்ஆன் 108:2 இல் (நபியே) நிச்சயமாக நாம் உமக்கு (அல்கவ்ஸர்) மிகுதி (யான நன்மை) யினை வழங்கியுள்ளோம். இச்சிறப்பு வேறு எந்த நபிக்கும் வழங்கப்படவில்லை. மறுமையில் சொர்க்கத்திற்குப் பரிந்துரைக்கும் முதல் உரிமை நபி (ஸல்) அவர்களுக்கு மட்டுமே உண்டு. (முஸ்லிம் ஹதீஸ் எண். 330)

இறைத்தூதர்களில் மிகுதியான மக்கள் பின் பற்றப்படுவதும் நானே. (முஸ்லிம் ஹதீஸ் எண் 330)

**பெருமானார் (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களுக்கும் இமாம் ஆவார்.**

என் அடியார்களே! (குல் யா இபாதி) என்று அழைப்பதற்குரிய தனது உரிமையை அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மட்டுமே வழங்கியுள்ளான். (39:54)

வேதங்கள் பெற்ற நபிமார்களுள் முழு மனித இனத்திற்கும், கியாமத் வரை முழுமையான இறுதியான வேதம் பெற்றவர் நபி (ஸல்) அவர்கள் மட்டுமே.



# இமாமக்ளின் இமாம் நபியே கரீம்
## முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்கள்



நபி (ஸல்) அவர்கள் நான் மறுமை நாளில் மக்களின் தலைவன் ஆவேன் என்று கூறியுள்ளார். ( புகாரி 3340)

ஆதம் நபி (அலை), நூஹ் (அலை), இப்ராஹீம் நபி (அலை), மூஸா நபி (அலை), ஈஸா நபி (அலை) ஆகியோரிடம் சென்று மக்கள் தங்களுக்காக பரிந்துரை செய்யும்படி வேண்டி, (அவர்களுக்கு) பரிந்துரை கிடைக்கவில்லை. இறுதியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பரிந்துரைக்காக வருகிறார்கள். நபி (ஸல்) அவர்கள் இறுதி பரிந்துரை செய்ய இறைவனும் அவர்களின் பரிந்துரையை ஏற்றுக் கொள்கிறான். (அல் ஹதீஸ் 2 ஆம் பாகம் பக்கம் 630-631)

(கப்ருகளிலிருந்து) எழுப்பப்படும் பொழுது நான்தான் மனிதர்களில் முதல்வனாக வெளிப்படுவேன். அவர்கள் இறைவன்பால் செல்லும்போது நான் தான் அவர்களுக்கு முன்னோடியாக இருப்பேன். அன்றி அவர்கள் நம்பிக்கை இழக்கும் போது நான் அவர்களுக்கு நன்மாராயம் (நற்செய்தி) கூறுவேன். அன்று என் கையில் புகழின் கொடி இருக்கும். என் இறைவனிடம் ஆதம் (அலை) அவர்களின் சந்ததிகளில் மிகவும் சிறப்புள்ளவன் நான்தான். (ஆதாரம்: திர்மிதி, அறிவிப்பாளர் : அனஸ் (ரலி))

மறுமை நாளில் நான் நபிமார்களுக்கெல்லாம் தலைவனாகவும் அவர்களின் பேச்சாளனாகவும் இருப்பேன். (ஆதாரம்:திர்மிதி) மறுமை நாளில் நான் சுவனபதியின் வாசலை அடைந்த அதனைத் திறக்குமாறு கோருவேன். அப்போது அதன் காவலர், நீர் யார் என்று என்னை வினவுவார். அதற்கு நான் முஹம்மது (ஸல்) என்பேன். அப்போது அவர் தங்களுக்கு முன்னர் எவருக்கும் வாசலைத் திறக்க வேண்டாம் என்றும், தங்களுக்கே அதனைத் திறக்க வேண்டும் என்றும் நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். எனக் கூறுவார் என அண்ணலார் நபி (ஸல்) அவர்கள் எடுத்துரைத்தார்கள். (அறிவிப்பாளர் ; அனஸ் (ரலி) ஆதாரம் : முஸ்லிம் )

**அனைத்துலகுக்கும் அருட்கொடை (21:108) யாக வந்த ஒரே ஒரு நபி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மட்டுமே ஆவார்கள்.**

.









# தொழுகையில் இன்பம்

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள்

தொழுகை என்பது, சிறப்பான ஒரு பிரார்த்தனை ஆகும். ஆனால், மக்கள் இதனை ஒரு பாரமாகக் கருது கின்றனர்.எந்தத் தேவையும் இல்லாத இறைவனுக்கு, மனிதன் இறைவனை வணங்க வேண்டும், திக்ரு செய்ய வேண்டும் என்பது தேவையில்லாதது தான். ஆயினும் தொழுகை, திக்ரு முதலியவற்றில் உள்ள பயன்கள் மனிதனுக்கே கிடைக்கின்றன. இவற்றின் மூலம் மனிதன் தான் குறிக்கோளை அடை கிறான்.இக்காலத்தில் வாழ்கின்ற மக்களின் நிலை கண்டு எனக்கு மிகவும் வருத்தம் ஏற்படுகிறது. அவர்களுக்கு வணக்க வழிபாடுகளிலும், நியாய நேர் மைகளிலும் பற்றில்லை. இவற்றில் பற்றில்லாததற்கு காரணம் உலகில் பொதுவாகப்பரவியிருக்கும் விஷம் என்ற சடங்கு சம்பிரதாயங்களைக் கண் மூடித்தன மாகப்பின்பற்று வதனால் தான் மக்களின் உள்ளத்தில் இறைவன் மீது இருக்க வேண்டிய பற்று இல்லாமல் போயிற்று. வணக்கத்தில் கிடைக்கின்ற இன்பமும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை.உலகில் இறைவன் படைத்துள்ள எல்லாப் பொருள்களிலும் ஓர் இன்ப த்தை வைத்திருக்கின்றான். இதைப் போன்று வணக்கத்திலும் சிறப்பான இன்பத்தை படைத்திருக் கின்றான்.சுவையும், மனமும் நிறைந்த ஓர் உணவில் நோய்வாய்ப்பட்டவருக்கு சுவை கிடைப்பதில்லை; அவ்வுணவு அவருக்குக் கசப்பாகவும், அதைக் கண்டாலே எரிச்சலாகவும் இருக்கிறது. இவ்வாறே எவர்களுக்கு வணக்கத்தில் இன்பமும், சுவையும் கிடைக்கவில்லையோ அவர்கள், தங்களுடைய ஆத்மீகத்தில் நோய் இருக்கிறது என்பதைத் தெரிந்து அதற்காகக் கவலைப்பட வேண்டும்."நான் ஜின் களையும் மனிதர்களையும் என்னை வணங்கு வதற்காகவே படைத்துள்ளேன்" என்று இறைவன் கூறுகின்றான். நான் சொன்னதைப்போன்று, உலகிலு ள்ள எல்லாப்பொருள்களிலும் ஓர் இன்பத்தை இறை வன் வைத்துள்ளான். இது உண்மையானால், வணக் கத்தில் இன்பம் ஏன் இருக்காது? உண்மை யிலேயே வணக்கத்தில் அதிக இன்பம் இருக்கிறது. அவ்வின் பத்தை சுவைக்கும் தகுதி வேண்டும். அவ்வளவு தான்.தானியங்கள், பலகாரங்கள் பழங்கள் முதலிய வற்றைச்சுவைத்து அழகிய பொருள்களை க்கண்டு இன்பம் அடை கின்றான். இனிமையான ஓசைகளைக் கேட்டு மகிழ்ச்சி அடைகின்றான்.






"சுவைத்து மனிதன் இன்புறுகின்றான். அழகிய பொருள்களைக் கண்டு இன்பம் அடைகின்றான். இனிமையான ஓசைகளைக் கேட்டு மகிழ்ச்சி அடைகின்றான். இவ்வாறு எல்லாவற்றிலும் இன்பம் இருக்கிறது என்றால்,வணக்கத்தில் மட்டும் எப்படி இன்பம் இல்லாமற் போய்விடும்?"

இவ்வாறு எல்லா வற்றிலும் இன்பம் இருக்கிறது என்றால் ,வணக்கத்தில் மட்டும் எப்படி இன்பம் இல்லாமற்போய்விடும்? கிடையாது ஆண், பெண்ணை இணையாகப் படைத்துள்ளோம் என்று இறைவன் கூறுகின்றான். இவ்விணைப்பில் இன்பத்தையும் படைத்துள்ளான், இதில் இன்பத்தை படைக்காமல் மக்களை பெற்றெடுப்பதே நோக்கமாக இருக்கு மானால், ஆணும் பெண்ணும் பாலுணர்வை விரும்ப மாட்டார்கள். இத்தொடர்பில் அவர்களுக்கு இன்பம் கிடைக்கிறது. சில அறிவீனர்கள் ,மக்களைப்பெற் றெடுத்தல் என்ற நோக்கத்திற்க்காக அல்லாமல், இன்பம் சுவைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டும் இத்தொடர்பை வைத்திருக்கின்றனர். எல்லா இன்பத்தை விடவும் மேலான இன்பம் வணக்கத்தில் இருக்கிறது. ஆண், பெண் உறவில் ஆண்மை யுள்ளவரே இன்பம் பெற முடியும்; ஆண்மை யில்லாதவரால் இன்பம் பெற இயலாது; நோய் வாய்பட்ட ஒருவரால் உயர்தரமான உணவில் சுவை காண முடியாது; இதை போன்று வணக்கத்தில் எவருக்கு இன்பம் கிடைக்கவில்லையோ அவர் துர்பாக்கியசாலியும் ஆத்மீக நோயும் உள்ளவராவார் ஆண், பெண் உறவு சிறிது காலத்திற்குரியது. ஆனால் நிரந்தரமான உண்மையான பேரின்பம் இறைவ னுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பில் தான் உள்ளது .உணவில் ஒருவனுக்கு சுவை கிடைக்கவில்லை யானால், அவர் மருத்துவரிடம் சென்று தனது குறைபாடுகளை எடுத்துச் சொல்கின்றார் ;தமக்கு உணவில் சுவை கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பணம் செலவளித்து, கஷ்டங்களை

# தொழுகையில் இன்பம்

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள்


பொருத்துக்கொள்கின்றார். உடலுறவில் இன்பம் கிடைக் காதவர், சில நேரங்களில் பெருங்கவலைக் குள்ளாகி, தற்கொலை செய்து கொள்ளவும் முற்பட்டு விடுகின்றார். இதனால் எத்தனையோ மரணங்களும் நிகழ்ந்து இருக்கின்றன.ஆனால் எவருக்கு வணக் கத்தில் இன்பம் கிடைக்கவில்லையோ, அவர் ஏன் கவலையடைந்து, அதற்காக முயற்சியை மேற்கொள் ளாமலிக்கின்றார்? உலக இன்பத்திற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளும் மனிதன் நிரந்தரமான உண்மையான மகிழ்ச்சியையும் இன்பத் தையும் பெற ஏன் முயற்சிகளை மேற்கொள்வதில்லை? தற்காலி கமான இன்பத்திற்கு மருத்துவம் உள்ளது என்றால் வணக்கத்தில் கிடைக்கும் நிரந்தரமான இன்பத்திற்கு மருத்துவம் இல்லாமற் போய்விடுமா? நிச்சயமாக இதற்கு மருத்துவம் உண்டு. ஆனால் இந்த இன்பத் தைப் பெற நிரந்தர முயற்சி தேவை. திருக்குர் ஆனில் ஓரிடத்தில் இறைவன் நல்லவர்களைப் பெண்களுக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளான்.

நம்பிக்கை கொண்டவர்களை! ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களுக்கும், ஃபிர்அவ்னின் மனைவி ஆசியா அவர்களுக்கும் ஒப்பிட்டு கூறியுள்ளான். இதிலுள்ள ரகசியம் என்னவென்றால், இணைவைப்பவர்களிலி ருந்து நம்பிக்கை கொண்டவர்களை இறைவன் படைக்கின்றான் என்பதேயாகும். ஆணுக்கும், பெண் ணுக்கும் இடையிலுள்ள தொடர்பை போன்று, அப்து என்ற அடிமைக்கும் ரப்பு என்ற வளர்ப்பவனுக்கும் இடையில் ஒரு தொடர்பு உள்ளது. ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள தொடர்பு இன்பமானதாக அமைந் திருக்குமானால், அத்தொடர்பு மிகச் சிறந்ததும் பயன் அளிக்கக் கூடியதுமாகும். இல்லை என்றால் இல்லற வாழ்க்கை சீரழிந்து ,குறிக்கோள் நிறைவேறாது போய்விடும். இதனால் ஆண் வேறிடத்திற்கு சென்று நாசமடைந்து, பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றான். இதில் குழந்தைகள் பிறந்துவிட்டாலோ, பல தலை முறைகள் வரை இத்தீங்கு தொடர்கின்றது. ஆண் ஒரு பக்கம் கெட்டலைகின்றான் என்றால், பெண் வேறொரு பக்கம் கெட்டலைகின்றாள். இதன் காரணமாக இரு வருக்குமே உண்மையான அமைதிகிடைப்பதில்லை. உண்மையான இல்லறவாழ்க்கையிலிருந்து விலகி கொள்வதால், பல்வேறு தீமைகளும், குழப்பங்களுமே விளைகின்றன.இதே போன்று மக்கள் ஆத்மீக இணைப் பிலிருந்து அகன்றுவிட்டால், ஆத்மீக தொழு நோயாளி களாகிவிடுவார்கள்.ஒருவருக்கு ஆத்மீக இன்பம் கிடைத்து விட்டால் அவர் உலகத்திலுள்ள இன்பங்களை விட அந்த ஆத்மீக இன்பத்திற்கே எப்போதும் முதலிடம் கொடுத்துக்கொண்டிருப்பார் என்று சூஃபிகள் கூறு கின்றனர். இந்த இன்பம் வாழ்வில் ஒரு தடவையாவது தமக்குக்கிடைத்து விட்டால்,அதற்காக அவர் தம் வாழ்வையே அர்ப்பணம் செய்ய ஆயத்தமாகி விடுவார்.ஆனால் உலகில் பெரும்பாலார் இந்த உண்மையை புரியவில்லை. **இத்தகையவர்களின் தொழுகைகள், தரையில் முட்டி முட்டி எழுவதேயாகும்**



"மக்கள் வணக்கத்தில் அலட்சியமாக இருப்பதற்கும் சோம்பேறிகளாக இருப்பதற்கும் காரணம், இறைவன் வணக்கத்தில் எந்த இன்பத்தை வைத்திருக்கின்றானோ, அந்த இன்பம் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்பதேயாகும்"

;ஓர் உடற்பயிற்சியை போன்று கஷ்டத்தைச் சகித்து கொண்டு உட்கார்ந்து எழுந்திருப்பதேயாகும்.இன்னொரு விஷயத்தை கவனிக்கும்போது எனக்குத் தாங்க முடியாத வருத்தம் ஏற்படுகின்றது; சிலர் தொழுவதன் நோக்கம், உலகில் தமக்கு மதிப்பும், மரியாதையும், பதவியும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தொழுகிறார்கள். பின்னர் அவர்களுக்கு இவ்வாசை நிறைவேறியும் விடுகிறது. இத்தகு போலியான வணக்கத்திற்கு இந்த அந்தஸ்து கிடைக்கமுடியுமென்றால், உண்மையாக வண ங்குபவர்களுக்கு இதைவிட மிகப் பெரிய அந்தஸ்து ஏன் கிடைக்க முடியாது என்ற எண்ணம் இவர்களுக்கு ஏற்படுவதில்லை. அதற்காக அவர்கள் கவலைப்படுவதும் இல்லை.மக்கள் வணக்கத்தில் அலட்சியமாக இருப்ப தற்கும் சோம்பேறிகளாக இருப்பதற்கும் காரணம், இறைவன் வணக்கத்தில் எந்த இன்பத்தை வைத்திருக் கின்றானோ, அந்த இன்பம் அவர்களுக்கு கிடைக்க வில்லை என்பதேயாகும். பெரிய நகரங்களில் வாழும் மக்களிடத்திலோ இதைவிட மோசமான நிலையே காணப்படுகிறது. அங்கு நூற்றுக்கு இருவர் கூட தங்கள் இறைவன் முன் உண்மையான பற்றுதலுடன் தலை சாய்ப்பதில்லை. இதற்கு காரணம் அவர்கள் வணக்க த்தினால் கிடைக்கும் இன்பத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளாததும் அதைச் சுவைத்துப்பார்க்காததும் ஆகும். பலர் தங்களுடைய வேலைகளில் மூழ்கி இருக்கின் றார்கள்;பாங்கு ஒலியை அவர்கள் கேட்கக் கூட விரும்புவதில்லை; அந்த ஒலியால் அவர்களின் உள்ளம் வருத்தமடைகிறது. இத்தகையவர்கள் மிகவும் துர்பாக் யசாலிகளே ஆவர்.நான் உங்களிடம் சொல்ல விரும்புவது என்னவென்றால், நீங்கள் இறைவனிடம் மிகுந்த ஆர்வத்துடனும் உருக்கத்துடனும் இறைவா; நீ உணவு வகைகளிலும் பழங்களிலும் எங்களுக்கு இன்பங் களையும் சுவைகளையும் வழங்கி யிருப்பது போன்று, தொழுகையிலும் எங்களுக்கு இன்பத்தையும் சுவை யையும் தந்தருள்வாயாக! என்று பிரார்த்தனைச் செய்ய வேண்டும்..



**இன்ஷாஅல்லாஹ் தொடரும்......**

**(மல்ஃபூஸாத், பாகம் 1 பக்கம் 21-34)**

# ஒரு கலீபஃத்துல்லாஹ்வின் தோற்றம்

ஹஸ்ரத் முஹையுதின் அல்-கலீபஃத்துல்லாஹ் முனீர் அஹ்மத் அஜீம் (AS)

**மஸீஹ் மவுது (அலை) அவர்களுக்கு**

**பிறகு முஜத்தித்**



**"இன்னி ஜாய்லுன் ஃபில் அர்லி கலீஃபா " ("நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை (கலீபாவை ) அமைக்கப் போகிறேன்)" (அல்குர்ஆன் : 2:31))**

**என்னிடமிருந்து உங்களுக்கு நிச்சயமாக நேர்வழி வரும்போது,யார் என்னுடைய (அவ்) வழியைப்பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு எத்தகைய பயமும்இல்லை, அவர்கள் துக்கப்படவும்மாட்டார்கள்." (அல்குர்ஆன் : 2:39)**

**நான் படித்து காட்டிய இந்த திருகுரானின் ஆயத்துகளின் ஒளியில் நாம் பார்த்தோமேயானால் இறைவன் தன் அருளாக** தான் நாடியவர்களை அவனே தேர்தெடுக்கின்றான். மாறாக,மனிதனால் அல்ல.மனிதன் பரிணாம வளர்ச்சி அடைந்த காலத்திலிருந்தே அல்லாஹ் அவனுடைய நபிமார்களை அனுப்ப த்தொடங்கினான் .இறைவன் மிகப்பெரிய வல்லமையாகவும் எண்ணிலடங்கா அருள்களுடன் அவனது நபியை அனுப்புகிறான் மேலும் அவரது பௌதிக மரணத்திற்கு பிறகு இறைவன் அவனுடைய தயவாக மற்றுமொறு வல்லமையை நம்பிக்கை கொண்ட மக்களுக்காக முஜத்தித்மார்கள் ,சீர்திருத்தவாதிகள் மற்றும் கலீபஃத்துல்லாஹ்மார்களை அவனுடைய மாபெரும் அருளால் எழுப்புகிறான்.

**"இன்னி ஜாய்லுன் ஃபில் அர்லி கலீஃபா"**

என்ற வசனத்திலிருந்து இறைவன் அவனுடைய கலீபாவை அவனே தேர்தெடுக்கின்றான் அன்றி மனிதர்களால் ஓட்டு போடு வதால் அல்ல இது ஒரு மந்திரியையோ அல்லது ஒரு MP தேர்தல் போன்றதல்ல மாறாக கலீபஃத்துல்லாஹ் தனித்தன்மை வாய்ந்தவர். ஏன்னென்றால் அவர் எந்த மனிதக்கரங்களால் தேர்தெடுக்கப்படாமல் இறைவனே அதை செய்கின்றான் இதி லிருந்து கலீபஃத்துல்லாஹ் ஞானம் மற்றும் ஆன்மிகரீதியாக பேசுபவர் மட்டுமில்லாமல் அந்த ஏக இறைவனின் விருப்ப த்திற்குரியவரும் ஆவர் மேலும் அவரை மிக உயர்த்த நல்லொ ழுக்க தரத்திலுள்ளும் எழுப்புகின்றான் ஏனென்றால் அவர் ஹஜ்ரத் முஹம்மத் முஸ்தபா (ஸல் ) அவர்களின் உம்மத்தின் அருளுக்குரிய பொக்கிஷமாவார். இது இறைவனின் தெய்விக ஏற்பாடாகும்.

# ஒரு கலீபஃத்துல்லாஹ்வின் தோற்றம்

**ஹஸ்ரத் முஹையுதின் அல்-கலீபஃத்துல்லாஹ் முனீர் அஹ்மத் அஸீம் (அலை)**

ஒரு கலீபஃத்துல்லாஹ்வின் வருகையால் அங்கே ஒரு ஆன்மீக மறுமலர்ச்சியின் ஊற்று உருவாகின்றது. மிக முக்கியமாக இஸ்லாத்திற்கு பங்கமோ அல்லது இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போதோ இது சம்பந்தமாக, அஹ்மதிய்யா ஜமாத்தின் தோற்றுனரும் வாக்களிக்கபட்ட மஸீஹ் ஹஜ்ரத் மிர்சா குலாம் காதியானி (அலை) அவர்கள் “ஷஹாதத்உல் குரான்” என்ற நூலில் இதை பற்றி என்ன கூறுகின்றார்கள் என்பதை இப்போது பார்ப்போம்:-

அவர்கள் இந்த நூலின் பக்கம் 42 - 60 இல் இவ்வாறு கூறுகின்றார்கள் "குத்ரதே ஸானியா" (இரண்டாவது வல்லமை) நிரந்தரமானதாகும் அது இறுதி நாள் வரை தொடரும்". இங்கே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இரண்டாவது வல்லமை என்று குறிப்பிடுவது கிலாஃபத்தை பற்றியதே ஆகும். மேலும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூற்றை பொறுத்தளவில் **“கிலாபத்” என்பதன் பொருள் கிலாபாதே ரசூல் (ஒரு தூதரை பின்தொடரும் கலீபாக்கள்) மட்டுமின்றி ஒவ்வொரு நூற்றாண்டும் வரக்கூடிய முஜத்தித்களையும் அடங்கியது**.மேலும் வாக்களிக்கப்பட்ட

மஸீஹ் (அலை) நம்பிக்கையின் அடிப்படையில் “கிலாபாத்” என்பதின் பொருள் நான்கு நேர்வழி பொருந்திய கலீபாக்களை மட்டுமின்றி இதை என்றென்றும் நிலைத்திருக்கவேண்டும் என்று அல்லாஹ் நினைக்கின்றான் என்று அன்னார் நம்பிக்கை கொண்டிருந்தார்கள் அதனால் தான் அன்னார் இந்த அஹமதியா கிலாபத் என்றென்றும் நிலைத்திருக்கும் என்று கூறவில்லை மாறாக என்றென்றும் நிலைத்திருக்கும் என்று அவர் கூறியது

## 1) குத்ரதே ஸானியா

## 2) இஸ்லாமிய கிலாபத்

**இந்த “குத்ரதை” (இரண்டாவது வல்லமை) அபுபக்கர் சித்திக் (ரலி) அவர்களின் தோற்றத்துடன் ஒப்பிடுகிறார்கள் அதாவது இதை “இஸ்லாமிய கிலாபத்” உடன் ஒப்பிடுகின்றார்கள்**

**1) குத்ரதே ஸானியா:-**

“குத்ரதே ஸானியா” கிலாஃபத்தை உள்ளடக்கியது இங்கேயே "கிலாபத்" என்று குறிப்பிடுவது வெறும் அஹமதியா கிலாபத் மட்டுமல்ல மேலும் இதை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது “அல் வஸ்ஸியத்” என்ற புத்தகத்தில்குறிப்பிடும் போது தனது இந்த **“குத்ரதை” (இரண்டாவது வல்லமை) அபுபக்கர் சித்திக் (ரலி)** அவர்களின் தோற்றத்துடன் ஒப்பிடுகிறார்கள் அதாவது இதை “இஸ்லாமிய கிலாபத்” உடன் ஒப்பிடுகின்றார்கள்

2. இஸ்லாமிய கிலாபத்:-

மேலும், இங்கே இஸ்லாமிய கிலாபத் என்பது கலீஃபதுல்-ரசூல்மார்களையும், முஜத்தித் மார்களையும், மஸீஹ்கள் அல்லது கலீபஃத்துல்லாஹ் களையும் அடக்கியது என்பதை நாம் அறிந்ததே,

மேலும் இதை விளக்குவதென்றால் மஸீஹ் (அலை)அவர்களின் காலத்தில் ஒருவர் உங்களுக்கு பிறகு முஜத்தித்மார்கள் வருவார்களா? என்று கேட்டார், அதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை)அவர்கள் இவ்வாறு பதில்அளித்தார்கள் :-

எனக்கு பிறகு ஒரு முஜத்தித்வருவதில் என்னதவறு இருக்கின்றது மூஸா (அலை)அவர்களின் கிலாபத் ஈஷா (அலை)அவர்களுடன் முடிந்தது ஆனால் **நபி (ஸல் ) அவர்களின் கிலாபத் கியாமத்து நாள் வரை தொடரும் எனவே ஒன்றுக்கு பின் ஒன்றாக முஜத்தித்கள் வருவார்கள்**. ஒருவேலை கியாமத்து நாள் நீடிக்கப்பட்டாலும் அதற்கும் ஒருவர் தோன்றுவார். நாம் ஒருபோதும் இறைநேசர்களும் புனிதர்களும் வருவதை ஏற்றுக்கொள்ளாமல்விடமுடியாது அப்போது திடீரென்று மறுமை தோன்றும் (மல்பூசாத், பாகம் 7, பக்கம் 119)

# ஒரு கலீபஃத்துல்லாஹ்வின் தோற்றம்

ஹஸ்ரத் முஹையுதின் அல்-கலீபஃத்துல்லாஹ் முனீர் அஹ்மத் அஸீம் (AS)

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் மேலும் தொடர்கிறார்கள்:-

**ஒவ்வொரு காலகட்டத்திலும் இஸ்லாம் அதன் உயிர்க்கருத்தை பல்வேறு முறையில் சான்றுடன் நிரூபிக்கின்றது,எனவே ஒவ்வொரு காலத்தில் தோன்றும் தீமைகள் மற்றும் தவறுகளை நீக்கக் கூடிய ஆற்றல் மற்றும் திறமைகளுடன் அந்த காலத்தின் முஜத்தித் அனுப்பப்படுகின்றார், ஏனென்றால் இறையச்சமும் மற்றும் சீர்திருத்தமும் அவன் நாடும் வரை தொடர்த்து கொண்டே செல் லும்.இதற்க்கு ஆதாரமாக நம் முன்னால் சென்ற வரலாரே சான்று பகிர் கின்றது. (“ஷஹாதத்துல் குர்ஆன் பக்கம் 46)**

மேலும் இதை குறித்து மஸீஹ்(அலை) அவர்கள் மற்றுமொரு இடத்தி கூறுகிறார்கள்:-

திருக்குரானில் உள்ள **“அலிஃப், லாம், ரா” என்ற எழுத்துக்களில் “ரா” என்ற எழுத்து முஜத்தித்மார்களின் வருகை நிரந்தரமானது என்றும் அது கியாமத் வரை தொடரும் என்றும் கூறியுள்ளார்கள், இவ்வாறாக நமது கண்மனி நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி வெற்றிகளையும் அருள்களையும் கியாமத் வரை கொண்டுவரும் முஜத்தித்மார்கள், நபி (ஸல்) அவர்களின் வெற்றிக்கான அடையாளமாக கருதப்படுவார்கள். (ரூஹானி கஸாயீன் No.2 Vol.2 pg.63)**

எனவே என் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே!, இதன் பக்கம் சிறிது சிந்தனை செய்து பாருங்கள்.

மேலும், உங்களுக்கு விளக்குவதென்றால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும்மொரு இடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:-

**நாம் உடுத்துகின்ற ஆடையை ஒரு வாரத்தில் சுத்தம் செய்வது அவசியமாகின்றது. அதைப் போலவே ஒவ்வொரு நூற்றான்டும் மார்க்கத்தை புத்துணர்வாக வைத்துக் கொள்ள ஒரு கலீபஃத்துல்லாஹ்வின் தேவையுள்ளது. இதன் காரணத்தினாலே ஒவ்வொரு நூற்றாண்டின் தலைமையிலும் ஒருவர் தோன்றி மனிதகுலத்தை சீர்திருத்தும் இந்த நடைமுறையை அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ் ஏற்பட்டுத்தியுள்ளான்.**

திருக்குரானில் உள்ள “அலிஃப், லாம், ரா” என்ற எழுத்துக்களில் “ரா” என்ற எழுத்து முஜத்தித் மார்களின் வருகை நிரந்தரமானது

**மேலும், ஒருநாள் ஒருவர் மஸீஹ் (அலை) அவர்களிடன் இவ்வாறு வினாவினார்கள் .**

**முஜத்தித்மார்கள் அனைத்து நூற்றாண்டும் வருவது அவசியமா?**

அதற்கு
மஸீஹே மவூத் அலைஹிவஸலாம்
அவர்களின் பதில் இவ்வாறாக இருந்தது:
ஆம்,வருவது ஒவ்வொரு நூற்றாண்டும்
அவசியமாகும்.

**மீண்டும் அந்த மனிதர் மஸீஹ்(அலை) அவர்களிடம் உங்களுக்கு “முன்னால் வந்த முஜத்தித்மார்களின் பெயர்களை கூறுங்கள் என்று கேட்டார்”**

**அதற்கு அன்னார் இவ்வாறாக பதிலளித் தார்கள்:-**

**எனக்கு முன் வந்த முஜத்தித்மார்களின்
பெயரை கூறுவது
என் வேலையில்லை. மேலும் இந்த கேள்வியை
ஒவ்வொரு நூற்றாண்டிலும்
முஜத்தித்மார்கள் வருவார்கள் என்று கூறிய
நபி (ஸல்)அவர்களிடன் கேட்கப்படவேண்டிய
கேள்வி என்று கூறினார்கள்.**




ஒவ்வொரு நூற்றாண்டிலும்
முஜத்தித்மார்கள் வருவார்கள் என்று மஸீஹ் மவுத்
அலைஹிவஸலாம் அவர்களின் பதில்

# ஒரு கலீபஃத்துல்லாஹ்வின் தோற்றம்

**ஹஸ்ரத் முஹையுதின் அல்-கலீபஃத்துல்லாஹ் முனீர் அஹ்மத் அஸீம் (அலை)**

இன்னும், மஸீஹ் (அலை) அவர்கள் இந்த ஹதீஸைப் பற்றி கூறும்போது (ஒவ்வொரு **நூற்றாண்டிலும்** முஜத்தித்மார்கள் வருவார்கள் என்பது குறித்து) இது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நபிமொழி என்றும், ஷா வலியுல்லாஹ் (ரஹ்) அவர்களும் இது நமது கண்மணி நாயகம் ( ஸல்) அவர்களின் உதட்டி லிருந்து தான் உதித்தது என்று சான்று பகர்கின் றார்கள். இது ஹதீஸ் நூல்களில் மிக தெளிவாக பதிவுசெய்யப்பட்டுள்ளது மேலும் இந்த ஹதீஸை எவரும் புறக்கணிக்கவில்லை. இந்த ஹதீஸ் ஒருபோதும் பொய்யானதில்லை மாறாக இது முற்றிலும் உண்மையான ஹதீஸ் என்பதற்க்கு நான் உறுதியளிக்கின்றேன். ஒவ்வொரு **நூற்றாண்டும்** ஒரு முஜத்தித் வருவதை நாம் இவ்வாறு கூறலாம், அதாவது ஒரு **நூற்றண்டில்** நமது பௌதீக உடல் பலஹீனமடைவதைப் போல ஒவ்வொரு **நூற்றா ண்டும்** ஆன்மீகமும் அதன் இறப்பை சந்திக்கின்றது, எனவே ஒவ்வொரு நூற்றாண்டு கடந்ததும் ஒரு புதிய தலைமுறை உருவாகின்றது, இந்த புதிய தலை முறைக்கு ஆன்மிக புத்துயிர் வழங்க ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித் மார்களை அனுப்புவது அந்த தூய இறைவனின் சுன்னத்துல்லாஹ்வாகும்.




மேலும், மஸீஹ் (அலை) அவர்கள் “இஸாலே ஔஹாம் “என்ற நூலில் (பக்கம் 197) மஸீஹ் மார்களின் வருகையின் கதவு எப்போதுமே திறந் திருக்கிறது. அது ஒருபோதும் அடைக்கப் படுவதி ல்லை என்று கூறியது மட்டுமின்றி“ அந்த வாக்க ளிக்கப்பட்ட மஸீஹ் வாதம் செய்பவன் நானே.ஆனால் நான் ஒருவனே மஸீஹ் என்றும் நானே முதலாவது மற்றும் கடைசி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் வாதம் செய்யவில்லை. என் பார்வையில் எனக்கு பிறகு 10000 க்கும் மேற்பட்ட வாக்களிக்கப்பட்ட மஸீஹ்கள் வருவார்கள், நான் இந்த காலத்திற்கு மட்டுமே வாக்களிக் கப்பட்ட மஸீஹாக உள்ளேன்”. என்று கூறியுள்ளார்கள் மேலே குறிப்பிடப்பட்ட

**அனைத்தையும் படித்த பிறகு “இஸ்லாமிய கிலாஃபத்” தொடர்பாக ஹஜ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு இருந்த நம்பிக்கையை மாற்றும் அதிகாரம் எவருக்கு இருக்கின்றது, ஆனால் துரதிஷ்டவசமாக, அஹமதிய்யா** ஜமாத்தை சேர்த்த சில மக்கள், குறிப்பாக மௌரிஷியஸ் ஜமாத்தை சார்த்த அமீரும் அவருடைய முல்லாக்களும் கிலாபத்தை பற்றிய தவறான செய்தியை பரப்புகின்றனர், அவர்களின் இப்போதைய நிலை எவ்வாறு உள்ளது என்றால், **“அஹமதிய்யா கிலாஃபத் எங்கள் உயிர்!!!”**

என்றும் இது என்றென்றும் நிலைத்திருக்கும் என்றும் மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிற்கு முற்றிலும் மாறான விசயத்தை பரப்புகின்றனர்.

பாருங்கள்!! இப்போது அஹமதிகளின் நம்பிக்கை எங்கே சென்றது? மஸீஹ் (அலை)அவர்களின் தூய கூற்றிலும் அவரது எழுத்துக்களிலும் அவர்களுக்கு உள்ள நம்பிக்கை சரியானதா அல்லது தவறானதா? ஒருவேளை சரி என்றால் ஏன்? அவர்கள் மஸீஹ் (அலை) அவர்களின் தூய கூற்றை மறுக்கிறார்கள்? நான் மேலே கூறியது அனைத்தும் என் சொந்த கருத்தல்ல, மாறாக அவை அனைத்தும் மஸீஹ் (அலை) அவர்கனின் தூய எழுத்துக்கள். அன்னாரின் கூற்றுகளையும் நூல் களையும் நானும் நீங்களும் ஏற்றுக் கொள்கிறோமென்றால் அவரின் போதனைகள் எங்கேப்போயிற்று? அன்னாரின் போதனைகள் தூக்கி எறியப்பட்டுள்ளது.

**நான் மேலே கூறியது அனைத்தும் என் சொந்த கருத்தில்லை மாறாக அவை அனைத்தும் மஸீஹ் (அலை) அவர்கனின் தூய எழுத்துக்கள்.**

**நான் கூறுவது சரியா? அல்லது உங்கள் நம்பிக்கை சரியா? மஸீஹ் (அலை) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ள ஒவ்வொரு உண்மை யான அஹ்மதியும் எனக்கு பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளீர்கள்! நீங்கள் தனிமைப் படுத்தப்படும் (அந்த நேரத்தில் உங்களுக்கு உதவ எவரும் இருக்கமாட்டார்கள்) அந்நாளில் அந்த சர்வ வல்லமையுள்ள ஏக இறைவனின் சன்னிதானத்தின் முன் நிச்சயமாக கேள்வி கேட்கப்படுவீர்கள். உண்மையை உணர்ந்த பிறகு அதை மறைப்பதற்காக முயற்சிப்பது பெரிய குற்றமாகும். படைப்பினங்களை மகிழ்விப்பதை விட நம்மை படைத்தவனை மகிழ்வியுங்கள். அல்லாஹ்விற்கு மட்டுமே அஞ்சுங்கள் மற்றவர் களுக்கு அஞ்சாதீர்கள்.**

# ஒரு கலீபஃத்துல்லாஹ்வின் தோற்றம்

**ஹஸ்ரத் முஹையுதின் அல்-கலீபஃத்துல்லாஹ் முனீர் அஹ்மத் அஜீம் (அலை)**

இதை பற்றி அல்லாஹ் திருக்குரானில் கூறும்போது

**நீங்கள் அறிந்து கொண்டே
உண்மையைப் பொய்யுடன் கலக்காதீர்கள்; உண்மையை மறைக்கவும் செய்யாதீர்கள். (அல்குர்ஆன்2:42)**

**தங்களை அஹ்மதிகள் என்று கூறிக்கொள்ளும் இவர்கள் என்னை அஹமதி இல்லை என்று கூறு கின்றார்கள்**. மேலும்,இவர்களை பொறுத்தவரையில் நான் அஹமதியாக இருந்தேன் இப்போ தில்லை, ஏன் னென்றால் நான் கலீபதுல்லாஹ் என்றும் எனக்கு அல்லாஹ் வஹீ அனுப்புகின்றான் என்று இன்றும் வாதம் செய்கிறேன் என்பதால், இவர்களுடன் ஒரு கலீபா இருப்பதால் என் வாதத்தை மறுக்கிறார்கள். **"ஒரு கலீஃபா இருக்கும்போது அல்லாஹ் இவ்வாறு கலீபஃத்துல்லாஹ்வாக தேர்வு செய்வது எவ்வாறு சாத்தியமாகும்"** என்று கேட்கின்றனர்

இதற்கான பதில் மிக மிக எளிமையானது :அல்லாஹ்வின் திருக்குரானை படியுங்கள்! உங்களுக்கு பதில் கிடைத்துவிடும், நபி (ஸல்) அவர்கள் நமக்களித்த போதனைகளை படியுங்கள்!! உங்களுக்கு பதில் கிடைக்கும். மேலும், நானும் நீங்களும் ஏற்றுக்கொண்ட மஸீஹ்(அலை) அவர்களின் போதனைகளை படியுங்கள்!!! உங்களுக்கு பதில் கிடைக்கும், இதில் எந்த சந்தேகமும்முல்லை அஹமதி என்று கூறிக்கொள்ளும் இவர்களது பார்வையில் நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மீதான நம்பிக்கையை கைவிட்டுவிட்டேன் என்பதாகும். மற்றவர்கள் நம்பிக்கையை எடைபோட நினைக்கும் மூடர்களின் சொல்லுக்கு ஒருபோதும் செவிசாய்த்து விடாதீர்கள், எனது நம்பிக்கை என்னவென்று என்னிடம் கேளுங்கள் .எனது நம்பிக்கையை எனது இதயத்தை பிளந்து உங்களுக்கு காட்டஇயலாது

அல்லாஹ்வின் மீது ஆணையாக எனது மரணத்துக்கு பிறகு எனது நம்பிக்கையும் எனது செயல்களுமே துணைநிற்குமேயன்றி வேறொருவருமில்லை. அந்த ஆகாய பூமியை கட்டிக்காக்கின்ற சர்வவல்லமையுள்ள எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் இந்த விஷயம் விசாரணைக்கு வரும்போது அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் சாட்சியாக நான் கூறுவேன் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் 14வது நூற்றாண்டின் முஜத்தித்தும் ஆவார். அவர் ஒரு உண்மையாளர், மேலும் நபி (ஸல்) அவர்களின் அடிமையும் அல்லாஹ்வின்நபியும், நபி (ஸல்) அவர்கள் கொண்டுவந்த ஷரீயத்தின் சேவகர் ஆவார். அல்லாஹ்விடம் இருந்து கிடைத்த ஞானத்தை மனித குலத்திற்காக அவர் வழங்கினார். அவர் புதிய ஷரீயத்தை கொண்டுவரவில்லை, என்றும் நான் நம்பிக்கை கொள்கின்றேன். எனது நம்பிக்கையை இழிவுபடுத்துபவர்களும் என்னை அஹ்மதி முஸ்லீம் இல்லை என்பவர்களும் இதை அனைத்தையும் காண்கின்ற எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பதில் கூறியே ஆகவேண்டும்.

இறுதியாக இந்த திருக்குரான் வசனத்துடன் நிறைவு செய்கின்றேன்,

**அல்லாஹ் மீது பொய்யைக் கற்பனை செய்கிறவனை விட, அல்லது அவனுடைய வசனங்களைப் பொய்யாக்குகிறவனை விட அநியாயக்காரன் யார்? நிச்சயமாக அநியாயக்காரர்கள் வெற்றிபெறவே மாட்டார்கள். (அல்குர்ஆன் : 6:22)**



**இந்த சொற்பொழிவிற்க்குப் பிறகு இறைவனிடமிருந்து எனக்கு இறங்கிய வஹீயை உங்களுக்கு கூறுகின்றேன்**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

**'Atii-'ullaaha wa 'atii'ur Rasuula wahzaruu: fa'intawallay'tum fa'lamuuu 'annamaa 'alaa Rasuulinal balaagul mubiin**

**அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பின்பற்றுங்கள் மேலும் கவனத்துடன் இருங்கள், ஆனால் நீங்கள் புறக்கணித்து திரும்பி விடுவீர்களானால், புரிந்துகொள்ளுங்கள், தூது செய்தியை எத்திவைப்பது மட்டுமே தூதரின் வேலை**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

**அல்ஹம்துலில்லாஹ்! ஆமீன்!!!**

# இஸ்லாத்தின் கடமைகள் யாவை?

**கேள்வி பதில் என்ற சமூக வலைதள குழுமத்தில் ஒரு இஸ்லாமிய நண்பர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் இந்த கட்டுரை அமைத்துள்ளது**

**ஸாஹிப் அல் ஃபரஜ்- காஜா மைதீன் சலீம் சாஹிப் அவர்கள்**

இந்த குழுமத்தில் உள்ள சகோதரர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் வா ரஹ்மதுல்லாஹி வா பரக்காத்துஹூ, சில நாட்களுக்கு முன் ஒரு சகோதரர் இஸ்லாத்தின் கடமை என்ன என்ற கேள்வியை கேட்டு இருந்தார் அதற்கு சில சகோதரர்கள் பதிலும் கொடுத்த இருந்தார்கள் மேலும் இந்த அழகிய கேள்விக்கு இன்ஷாஅல்லாஹ், ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் ஆன்மிக வழிகாட்டல் மூலமாக நாம் விளங்கிகொள்வோம்

இஸ்லாத்தின் கடமை என்ன என்றால் நம் அனைவரும் ஐந்து கடமைகளை மிக எளிமையாக கூறிவிடுவோம், ஏன் ஒரு இஸ்லாமியர் அல்லாத பள்ளியில் படிக்கும் மாணவனுக்கு கூட அவன் பாட புத்தகத்தில் இவ்வாறு தான் உள்ளது அல்லவா நண்பர்களே !!

**இறைவன் மறைவானவனாக இருக்கின்றான், அவன் தனது முகத்தை தூதர் மூலமாக காட்டுகின்றான்**

இன்ஷாஅல்லாஹ், முதலில் நமது எஜமானர் பெருமானார் (ஸல்) அவர்களின் புனித உதட்டில் இருந்து என்ன உதித்தது என்று பார்ப்போம்.

சஹிஹுல் புகாரி ஹதீஸ் :-4347. இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார். முஆத் இப்னு ஜபல்(ரலி) அவர்களை இறைத்தூதர்(ஸல்)....."அவர்களிடம் நீங்கள் செல்லும் போது, '**வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவருமில்லை** என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைத்தூதர் என்றும் சாட்சியம் பகரும்படி அவர்களை அழையுங்கள். இதில் அவர்கள் உங்களுக்குக் கீழ்ப்படிந்தால், அல்லாஹ் அவர்களின் மீது ஒவ்வொரு நாளும் ஐவேளை தொழுகைகளைக் கடமையாக் கியுள்ளான்......" அன்னார் மிக தெளிவாக தூதரை ஏற்று ஏகத்துவத்திற்கு வரும்போது தான் அவர்கள் மீது மற்ற அமல்கள் கடமையாகின்றது. இதையே வாக்களிக் கப்பட்ட மஸீஹ்(அலை) பின்வரும் திருகுரான் வசனத்தை மேற்கோள் கட்டியவராக

**அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்களையும் நிராகரித்து மேலும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதர்களுக்கு மிடையில் வேற்றுமை பாராட்ட எண்ணி மேலும் (தூதர்களுள்) சிலரை நாங்கள் ஏற்றுக் கொள்வோம் சிலரை நிராகரிப்போம் எனவும் கூறி, இதற்கிடையில் ஏதேனுமொரு வழியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள விரும்புகின்ற வர்கள்.உண்மையில் இவர்களே முற்றிலும் நிராகரிப்பவர்களாவர். நிராகரிப்பவர் களுக்கு இழிவு படுத்தக்கூடிய ஆக்கினையை நாம் ஏற்படுத் தியுள்ளோம்.(4:151)**

இறைவனையும் சில தூதர்களையும் நம்பிக்கை கொண்டால் போதும் என்று கூறுபவர்களே! ஒரு தூதர் இல்லாமல் மனிதன் ஏகத்துவத்தை ஏற்றுக்கொள்ள முடியுமா? என்பதை ஏகத்துவத்தின் இரசியத்தை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள் :-

**(தூதர்களுள்) சிலரை நாங்கள் ஏற்றுக் கொள்வோம் சிலரை நிராகரிப்போம் எனவும் கூறி, இதற்கிடையில் ஏதேனுமொரு வழியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள விரும்புகின்றவர்கள்(4:151)**

ஏகத்துவம் கற்களில் மறைந்து இருக்கின்ற அந்த நெருப்பை போன்றே வைக்கப்பட்டுள்ளது என்பதே இதில் உள்ள ரகசியம் ஆகும். தூதர், நெருப்பு மறைந்திருக்கும் கல் போன்றவர், அந்த கல்லின் மீது தனது கவனத்தை செலுத்துகின்ற அடியின் மூலமாக அந்த நெருப்பு வெளியில் கொண்டு வரப்படுகின்றது எனவே தூதர் என்ற இந்த கல் இல்லாமல் ஏகத்துவத்தின் நெருப்பு ஏதோ ஒரு உள்ளத்தில் உருவானது என்பது ஒருபோதும் சாத்தியமாகாது* ,ஏகத்துவத்தை தூதர்கள் மட்டுமே பூமிக்கு கொண்டு வருகின்றார்கள் அவர்கள் மூலமாகவே இது பெறப் படுகின்றது இறைவன் மறைவானவனாக இருக்கி ன்றான், அவன் தனது முகத்தை தூதர் மூலமாக காட்டுகினறான் பாருங்கள்!! தூதர் மீது நம்பிக்கை கொள்ளாமல் இரட்சிப்பை எவ்வாறு பெற இயலுமா? மேலும் தூதர் மீது நம்பிக்கை கொள்ளாமல் வெறுமனே ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்வதால் என்ன பலன்??"தவ்ஹீது" என்ற பெயரே காலத்தின் நபி அதாவது ஹஜ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு கட்டுப்பட்டு நடக்காமல் ஒருபோதும் கிடைக்காது எந்த ஒரு நபர் முழுக்க முழுக்க **காய்ந்துபோன தவ்ஹீதின் மீது நம்பிக்கை வைத்து தூதர் இல்லாமல் தன்னிறைவு பெற்றவராக தன்னை கருதிகொள்பவர் இறை இரட்சிப்பை பெறாத துர்பாக்கியசாலி ஆவார் என்று** அன்னார் நம்மை எச்சரிக்கின்றார்கள்.நபிமார்களின் வருகை தொடர்பான இறைவசனம்- 3:82 பற்றி மஸீஹ் மவுது (அலை) கூறும்போது நபிமார்கள் தத்தமது காலத்தில் மரணித்து விட்டனர். இந்தக் கட்டளை ஒவ்வொரு நபியின் சமுதாயத்துக்கும் கூறப்படுகின்றது அதாவது அத்தூதர் தோன்றும் போது அவர் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் அவ்வாறு செய்யாமல் இருந்தால் நீங்கள் பிடிக்கப்படுவீர்கள் என்று அவர்களுக்கு கூறப்படுகின்றது

**ஒவ்வொரு நபியின் சமுதாயத்துக்கும் கூறப்படுகின்றது அதாவது அத்தூதர் தோன்றும் போது அவர் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் அவ்வாறு செய்யாமல் இருந்தால் நீங்கள் பிடிக்கப்படுவீர்கள்**




# இஸ்லாத்தின் கடமைகள் யாவை?

**கேள்வி பதில் என்ற சமூக வலைதள குழுமத்தில் ஒரு இஸ்லாமிய நண்பர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் இந்த கட்டுரை அமைத்துள்ளது**

ஸாஹிப் அல் ஃபரஜ்- **காஜாமைதீன் சலீம் சாஹிப் அவர்கள்**

**صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَ لَا الضَّآلِّيْنَ**

﴾ நீ அருள் புரிந்தவர்களின் வழியில் (உனது தூதர்கள் மற்றும் நபிமார்களின் )(1:7)

இப்போது ஐவேளைத் தொழுகையிலும் ஓதப்படுகின்ற இந்த வசனத்தில் இறைவனின் ஆன்மீக அருட்கொடையாக இறைஞானமும் இறைவன் மீதுள்ள அன்பும் தூதர்கள் மற்றும் நபிமார்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. தூதரை பின்பற்றி நடப்பது பற்றி சிறிதும் பொருட்படுத்தாமல் இருந்தாரோ அவர் தொழுகையின் நோக்கம் என்னவாக இருக்க முடியும்? இவர்களது பார்வையில் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்ட பிராமணர் கூட இரட்சிப்பை பெறக்கூடியவராக இருக்கின்றார். மேலும் ஒரு நபர் இஸ்லாத்தை விட்டு விட்டு முர்தத் ஆகிவிட்டாலும் கூட அவரும் காய்ந்துபோன தவ்ஹீத் காரணமாக இறை இரட்சிப்பை பெற முடியும் ,இன்னும் யூதராகவோ அல்லது கிறிஸ்தவராகவோ அல்லது ஆரியராகவோ இருக்கின்ற ஒரு மனிதர் இஸ்லாத்தை பொய்ப்படுத்தி வந்தாலும் ஹஜ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பகைவராக இருந்தாலும் கூட அவர் ஏகத்துவவாதி ஆக இருந்தால் அவருக்கு கூட இறை இரட்சிப்பை பெறமுடியும் என்று கருதலாம் . **பிறகு தொழுகையினால் எதுவும் கிடைக்காது நோன்புகள் வீணானதாகும் ஆனால் நம்பிக்கை கொண்ட ஒருவருக்கு இந்த வசனம் மட்டுமே போதுமானதாகும்** இதன் மூலமாக ஆன்மீக செல்வத்தின் எஜமானராக நபிமார்களும் தூதர் களும் மட்டுமே இருக்கின்றனர் ஒவ்வொருவருக்கும் அவர் களைப் பின்பற்றி செல்வதன் மூலமாக அதிலிருந்து பங்கு கிடைக்கின்றது பிறகு ஸூரா ஆரம்பத்தில் உள்ள வசனத்தில் இவ்வாறு வருகின்றது

மேலும் திருக்குர்ஆன் 7: 35 என்ற இறை வசனத்திற்கு முஸ்லிஹ் மவுத்(ரலி) அவர்கள் இவ்வாறு விளக்கம் தருவதையும் சற்று சிந்திப்போம்!

"இவர்களது பார்வையில் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்ட *பிராமணர்* கூட இரட்சிப்பை பெறக்கூடியவராக இருக்கின்றார். மேலும் ஒரு நபர் இஸ்லாத்தை விட்டு விட்டு முர்தத் ஆகிவிட்டாலும் கூட அவரும் *காய்ந்துபோன தவ்ஹீத்* காரணமாக இறை இரட்சிப்பை பெற முடியும்"

இந்த வசனமும் இம்முந்தைய வசனங்களைப் போன்றே முக்கியமாக கவனிக்கப்பட தகுந்ததாக இருக்கிறது (7:27,28,32).ஆதமுடைய மக்களே" என்று இங்கு கூறப்பட்டிருக்கும் வார்த்தைகள், முஹம்மது ஸல்(அலை) அவர்களின் காலத்திற்குரிய மக்களுக்கும்,அதன் பிறகு தோன்றும் தலைமுறைகளுக்குமே பொருந்துமே தவிர கடந்த காலங்களில் வாழ்ந்த மக்களுக்கோ, ஆதமுடைய மக்களுக்கோ* பொருந்தாது .

இறைவனையும் சில தூதர்களை நம்பிக்கை கொண்டால் போதும் என்று கூறுபவர்களே! ஒரு தூதர் இல்லாமல் மனிதன் ஏகத்துவத்தை ஏற்றுக்கொள்ள முடியுமா? என்பதை ஏகத்துவத்தின் இரசியத்தை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள் :-

இது என்ன கண்ணோட்டத்தில் இங்கு கூறப்பட்டிருக்கிறது என்றால், மனிதகுலத்தின் எதிர்கால தலைமுறையினருக்கு தெரிவிக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது. இதன் பலனாக, ஆதமுடைய மக்கள் இவ்வுலகில் இருக்கும் வரை, அல்லாஹ்வின் புறமிருந்து தூதர்கள் இவ்வுலகில் தோன்றிக்கொண்டே தான் இருப்பார்கள்.இதனால், நபி (ஸல்) அவர்களை எதிர்ப்பவர்களாலும், அவர்களுக்கு எந்த வீழ்ச்சியும் வரப்போவது இல்லை, நபித்துவமும் இதனால் நிற்கப்போவதில்லை. ஆதமின் காலத்தில், ஆதமின் சந்ததிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட பெரிய வாக்குறுதி என்னவென்றால், அல்லாஹ்வின் தூதர்கள் எல்லா கால கட்டங்களிலும் பல்வேறு நாடுகளில் உள்ள வெவ்வேறு சமுதாயங்களுக்கும் யுகமுடிவு நாள் வரை தோன்றிக் கொண்டே தான் இருப்பார்கள் (2:39) . இவ்வசனம், "உங்களிடமிருந்து தூதர்கள் உங்களிடம் வந்தால்" என்பதற்கு, அல்லாஹ்விடமிருந்து தூதர்கள் வரலாம் அல்லது வர மாட்டார்கள் என்று பொருளல்ல. அதேப்போன்ற ஒரு வசனம், "என்னிடமிருந்து உங்களுக்கு நேர்வழி வந்தால்" (2:39) என்ற வசனத்திற்கும், என்னிடமிருந்து நேர்வழி வரலாம் அல்லது வராமலும் இருக்கலாம் என்று பொருளல்ல. நிச்சயமாக, இந்த வார்த்தையில் உள்ள 'ما' (இருந்தால்) பொருள் என்ன வென்றால் , ஒரு தூதருடைய காலத்தில் நீங்கள் வாழ நேர்ந்தால் நீங்கள் அவரை ஏற்றுக்கொள்ள தவறி விடாதீர்கள் என்பதேயாகும். எனவே, இவ்வார்த்தையின் மூலம், காலத்தை நாம் நிர்ணயிக்கக்கூடாது என்பது புலப்படுகிறது. அதாவது, அல்லாஹ்வின் புறமிருந்து ஒரு தலைமுறையிலோ, அல்லது மற்றொரு தலைமுறையிலோ எந்த ஒருவர் தோன்றினாலும், அவர் எப்பொழுது தோன்றினாலும் அவரை நாம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். என்னுடைய அடையா ளங்களை உங்களுக்கு விளக்கினால் என்ற வசனம் உணர்த்துகின்ற உண்மை என்னவென்றால், முஹம்மது (ஸல்) அவர்களுக்கு பிறகு வரும் தூதர்கள் யாவரும் எந்த புதிய ஷரீயத்தையும் கொண்டு வரப்போவதில்லை என்பதே தவிர இஸ்லாமின் சட்டத்தை முழுமையாக பின்பற்றி நடக்கச் செய்வதற்கும், ஏற்கனவே அளிக்கப்பட்டிருக்கும் அல்குர்ஆனின் வசனங்களை விளக்கி கூறுவதற்கும், ஓதிக்காட்டுவதற்கும் அவர்கள் வருவார்கள்

"பெருமானார் ஸல்(அலை) அவர்களுக்கு பிறகு வரும் தூதர்கள் யாவரும் எந்த புதிய ஷரியத்தையும் கொண்டு வரப்போவதில்லை"

**இன்ஷாஅல்லாஹ்**
**தொடரும்......**

# நம் இறைவன் பேசக்கூடியவன்

ஸாஹிப் அல் ஃபரஜ் -ஜபாருல்லாஹ்கான் சாஹிப் அவர்கள்

இறைவன் மனிதனிடத்தில் வஹீயின் மூலமாகப்பேசுவதை நிறுத்திவிட்டதாக முஸ்லிம்களிடையே ஒரு தவறான கருத்து நிலவிவருகிறது. இறைவன் மனிதனிடத்தில் பேசுவதை நிறுத்திவிட்டான் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. அல்லாஹ் அன்று பேசியது போன்று என்றும் பேசுவான் என்பதே உண்மை! அண்ணல் நபி(ஸல்) பெருமானாருக்குப் பிறகு அவன் யாருடனும் பேச மாட்டன் என்று கூறுவது அறியாமை!! இறைவஹீயை பற்றித் திருக்குர்ஆனில் இவ்வாறு வருகிறது.

**நிச்சயமாக எவர்கள் எங்களுடைய இறைவன் அல்லாஹ் என்று கூறி அதில் முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளார்களோ அவர்களிடத்து மலக்குகள் இறங்கி நீங்கள் பயப்படவோ, வருத்தப்படவோ வேண்டாம் என்று கூறுவார்கள். (41:31)**

இந்தத் திருவசனம் உறுதியான நம்பிக்கையாளர்களிடம் மலக்குகள் வந்து வஹீ அறிவிப்பார்கள் என்பதை உணர்த்துகிறது. நபி (ஸல்) அவர்களுக்கு பிறகு இறையடியார்கள் எவரும் இறையறிவிப்பு பெறவில்லையென்றால் மேற்கண்ட திருவசனப்படி அவர்கள் முழுமையான. உறுதியான நம்பிக்கை இல்லாதவர்கள் என்று கூறுவதற்கு ஒப்பானதாகும். தன்னை முழுமையாகப்பின்பற்றுபவர் களுடன் இறைவன் பேசாமல் இருப்பானா? இறைவன் இவர்களோடு பேசவில்லை என்றால் இவர்களுக்கும் ஏனையோருக்கும் என்னதான் வேறுபாடு? அடுத்து திருக்குரானில் இவ்வாறு காண்கிறோம்:-

"இறைவன் மலக்குகளை தன் அடியார்களில் தான் விரும்பியவர்களிடம் "வஹீ" கொடுத்து அனுப்புகின்றான். (16:3)"அல்லாஹ் மிகப் பெரும் உயர்ந்த பதவியுடயவனும் அர்ஷுக்கு சொந்தக்காரனும் ஆவான். அவன் தன் அடியார்களில் தான் விரும்புபவர்களிடத்து "வஹீ" இறக்குகின்றான்."(40:16)

இந்த இரு வசனங்களும் இறைவன் வானவர்கள் மூலமாக தனது அடியார்களுக்கு செய்தி அனுப்புவான் என்பதை உறுதிசெய்கின்றன.மேற்கூறப்பட்ட மூன்று வசனங்களிலும் . "ததனஸ்ஸிலு" , "யுனஸ்ஸிலு" "யுஹ்யா" என்ற சொற்களே இடம் பெற்றுள்ளன. இச்சொற்கள் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் குறிப்பிடும் சொற் களாகும். எனவே இந்த வசனங்கள் கடந்த காலத்தை குறிப்பிடுபவை எனக் கருத இடமில்லை.இனி இது குறித்து நபிமொழிகளில் என்ன காணப்படுகிறது என்பதை பார்ப்போம். வஹீ பற்றிய நபிமொழிகள் வஹீ என்னும் இறையருள் தமது சமுதாயத்தில் எப்போதும் நிலைத்திருக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்

ஸஹீஹுல் புகாரியில் இவ்வாறு காணப்படுகிறது:-உங்களுக்கு முன் இஸ்ரவேலர்களில் நபிமார்கலல்லாதவர்களிடமும் இறைவன் பேசியிருந்தான். எனது சமுதாயத்திலும் அப்படிப்பட்டவர்கள் (வஹீ, இல்ஹாம் பெறுகின்றவர்கள்) இருப்பார்கள் அவர்களில் உமரும் ஒருவராவார்.(புகாரி - அத்தியாயம் மனாஹிப்உமர்)




ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் முகத்தஸ் என்றால் யார் என்று வினவியதற்கு, எவரோடு இறைவன் அவருடைய மொழியில் பேசுவானோ அவருக்கு முகத்தஸ் என்று பெயர் என அவர்கள் பதிலளித்தார்கள். (தாரிகுல் குலபா - திப்ரீ) இந்த இரண்டு நபி மொழிகளிலிருந்து நபி பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்திலேயே இறைவன் மற்றவர்களோடு பேசியிருக்கிறான் என்பதும் அன்னவரின் காலத்திற்கு பிறகும் பேசி வந்திருப்பான் என்பதும் தெளிவாகிறது.

**"வாக்களிக்கப்பட்ட மஸீஹிர்க்கு ஜிப்ரீல் மூலமாக வஹீ இறங்கும்"**

இமாம்களின் கருத்து:-

"வஹீ" அனுப்பப்படுவது நிறுத்தப்படவில்லை என்பதை இஸ்லாமிய அறிஞர்களும் உறுதி செய்துள்ளனர்.செய்ஹுல் அக்பர் ஹஸ்ரத் முஹைதீன் இப்னு அரபி(ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள் :-"திருமறையில் கூறப்பட்டுள்ள மூன்று முறைகளில் அல்லாஹ் தனது நல்லடியார்களான வலிமார்களோடு உரையாடுகின்றான்"(புதுகாத்தே மக்கியா) வாக்களிக்கப்பட்ட மஸீஹிர்க்கு "வஹீ" இறங்குமா என அல்லாமா இப்ன் ஹைஜரிடம் கேட்கப்பட்டபோது ஆம் என அவர்கள் பதிலளித்ததோடு சஹீஹ் முஸ்லிமிலுள்ள கீழ் வரும் நபிமொழியை ஆதாரமாக எடுத்துக்காட்டினார்கள். வாக்களி க்கப்பட்ட மஸீஹிர்க்கு ஜிப்ரீல் மூலமாக வஹீ இறங்கும். ஏனெனில் ஜிப்ரீல் அல்லாஹ்விற்கும் நபிமார்களுக்கும் இடையிலான (வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நபியாக இருப்பார்) தூதுவராவார். அதோடு, நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பிறகு பூமியில் ஜிப்ரீல் இறங்கமாட்டார்கள் என்று கூறுவது தவறான் கூற்று என்றும் "ஷரீயத்தை" கொண்ட வஹீயே நிறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறினார்கள்.(தப்சீர் ரூஹுல் மஆனி)

**"ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் முகத்தஸ் என்றால் யார் என்று வினவியதற்கு, எவரோடு இறைவன் அவருடைய மொழியில் பேசுவானோ அவருக்கு முகத்தஸ் என்று பெயர் என அவர்கள் பதிலளித்தார்கள்."**

# நம் இறைவன் பேசக்கூடியவன்

A God who speaks

ஸஹிப் அல் ஃபரஜ்- ஜபாருல்லாஹ்கான் சாஹிப் அவர்கள்

அல்குர்ஆன் 20:88. பின்னர் அவன் அவர்களுக்காக ஒரு காளைக்கன்றை (உருவாக்கி) வெளிப்படுத்தினான்; அதற்கு மாட்டின் சப்தமும் இருந்தது. (இதைக் கண்ட) சிலர் “இது தான் உங்களுடைய நாயன்; இன்னும் (இதுவே) மூஸாவின் நாயனுமாகும்; ஆனால் அவர் இதை மறந்து விட்டார்” என்று சொன்னார்கள்.20:90 - இல் அந்தக் கன்றுக் குட்டி அவர்களுடன் எவ்விசயத்திற்கும் பதிலளிக்கவில்லை என்பதையும், மேலும் அவர்களுக்கு எந்தத் தீமையோ நன்மையோ செய்ய அதற்குத் தகுதியில்லை என்பதையும் அவர்கள் காணவில்லையா? என்று இறைவன் கேட் கிறான். இதிலிருந்து நாம் தெரிவது என்னவென்றால், கடவுள் என்றால், அவர் பேச வேண்டும்; தீமையோ நன்மை யோ செய்ய வேண்டும். இந்த கன்றின் சிலை பேசாது. தீமையோ நன்மையோ செய்யாது. எனவே இது கடவுள் இல்லை. சிலை என்பதாகும். அல்லாஹ் வஹி அனுப்பு வதை நிறுத்தி விட்டான். அதாவது பேசுவதை நிறுத்தி விட்டான் என்று முஸ்லிம்கள் நம்பினால் இது மேற்கண்ட இறைவனின் கூற்றுக்கு எதிரானதாகும். அதாவது அல்லாஹ்வை சிலையாக, பொய்த் தெய்வம் என்று நம்புவதாகும். (நஊதுபில்லாஹ்) என்பது விளங்க வில்லையா? அல்குர்ஆன் 41:31-32 எங்கள் இறைவன் அல்லாஹ் எனக்கூறி, அதில் நிலைத்திருப்பவர்களிடம் நீங்கள் அஞ்ச வேண்டாம்; கவலைப்படவும் வேண்டாம்; உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறிய வாறு) வானவர்கள் இறங்குவர். (மேலும் அவர்கள்) நாங்கள் இவ்வுல வாழ்க்கையிலும், மறுமையிலும் உங்கள் நண்பர்கள் என்றும் கூறுவார். இறையடியார்களின் இறப்பின் போது மலக்குகள் இறங்கி வஹீ அறிவிப் பார்கள் என்பதல்ல! இந்த வசனத்தில் "உலக வாழ்க்கையில்" என்று கூறுவதால், இறை நம்பிக்கையில் உறுதியானவர்கள் இந்த உலகில் வாழும் போதே வஹீ இறங்கும் என்பதையே தெளிவுபடுத்துகிறது.

மேலும் இது சம்பதமாக காலத்தின் இமாம் ஹஸ்ரத் முஹையதீன் அல் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மத் ஆசிம் (அலை) அவர்களின் கூற்றுடன் முடித்துக் கொள்கின்றேன்:-

மனிதன் அழகானதொரு வீட்டை கட்டி அதில் விலை உயர்ந்த அலங்காரத்தைச்செய்த பின் அதை பழுது பார்க்காமல் அலட்சியமாக இருந்து சீரழிய விட்டு விடுவானா? அல்லது அம்மனிதன் அழகியதொரு தோட்டத்தை அமைத்துவிட்டு, அதற்கு நீர் பாய்ச்சாமல் அதை காய்ந்து போகவிட்டுவிடுவானா? இவ்வாறு ஒரு போதும் நடக்காது!மேலும் இது எவ்வாறு அறிவு சார்ந்ததாக இல்லையோ, அதுபோலவே ஒரு சிறந்த மார்க்கத்தை மனிதஇரட்சிப்பிற்காக அருளியபின் அதை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க இறைவன் தவறிவிட்டான் என எண்ணுவது எவ்வாறு சாத்தியமாகும்? சற்று சிந்தியுங்கள் சகோதரர்களே! மூஸா (அலை) அவர்களுக்கு பிறகு இறைவன் ஒன்றன்பின் ஒன்றாக தூதர்களை அனுப்பி யூதமார்க்கத்தை உயிருடன் வைத்தி ருக்கவும் அந்த மார்க்கம் எந்த நோக்கத்திற்காக



அருளப்பட்டதோ அது நிறைவேறியதையும் நாம் பார்க்கவில்லையா? ஈஸா(அலை) அவர்களுக்கு பிறகு அவன் கிறிஸ்தவ போதனைகளை உயிருடன் இருக்கச் செய்ய சிலரை நியமிக்கவில்லையா? வேதங்களை அருளிய பின் அவன் கிருஷ்ணரையும், ராமச்சந்திர னையும் மற்றும் புனிதர் களையும் வேதங்களின் உண்மை போதனைகளை வலுப்படுத்த அனுப்ப வில்லையா? சௌராஷ்ட்டருக்கு பிறகு பாரசீக மார்க்கத்தை பாதுகாக்க அவன் வழிவகைகளை செய்ய வில்லையா?

மேலும் முஹம்மத் முஸ்தபா(ஸல்) அவர்களுக்குப்பிறகு இஸ்லாத்தின் போதனைகளை **இறைஅறிவிப்பின் மூலமாக** விளக்குவதற்கும் அதனை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கவும் தொடர்ச்சியாக புனிதர்களை எழுப்ப வில்லையா? ஒரே வார்த்தையில் சொல்ல வேண் டுமெனில் நாம் எந்தக்கோணத்திலிருந்து பார்த்தாலும் உலகின் தற்போதைய நிலைக்கு இறைஈர்ப்புள்ள வழிகாட்டியே அவசியமாகும்.எனவே, உண்மையைத்தேடக் கூடியவர்களே! எனது அன்பு சகோதர சகோதரிகளே! கடந்த காலங்களில் பலமுறை உங்களிடம் கூறியுள்ளேன் அதாவது நான் எந்த ஒரு புதியமார்க்கத்தை கொண்டு வரவில்லை.ஆனால் உண்மை இஸ்லாத்தின் போதனை களை உயிர்ப்பிக்கவும் இஸ்லாத்திற்கு சேவை செய்யவும், மீட்கவும்,அழகிய இஸ்லாத்தை பரப்பவும், மனிதகுலத்தை அழகிய இஸ்லாத்தின் மூலமாக இறைவனின் பால் வழிநடத்தவும் அனுப்பப்பட்டுள்ளேன் .இன்ஷாஅல்லாஹ் உள்ளத்தூய்மையுடன் உண்மையின் பால் உங்களை எல்லாம்வல்ல இறைவன் வழி நடத்துவானாக.ஆமீன்!

**மனிதன் அழகியதொரு தோட்டத்தை அமைத்துவிட்டு, அதற்கு நீர் பாய்ச்சாமல் அதை காய்ந்து போகவிட்டுவிடுவானா?**

# இரத்த சந்திரன் இறைவனின் மாபெரும் அத்தாட்சி

ஸஹிப் அல் ஃபரஜ் -காஜாமைதீன் சலீம் சாஹிப் அவர்கள்





ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்கள் தன்னுடைய வருகைக்கான இறைவனின் மாபெரும் அத்தாட்சிகளில் ஒன்றாக தொடச்சியாக தோன்றும் இரத்த சந்திரன் மற்றும் சூப்பர் மூன் பற்றி அன்னார், ஒவ்வொரு நூற்றாண்டில் மட்டுமே தோன்ற கூடிய இந்த அறிய நிகழ்வு இந்த நூற்றாண்டில் இமாம் ஆக தோன்றியுள்ள தனது வருகைக்கான இறைஅடையாளமாகும் என்று கூறியுள்ளார்கள்.இந்த அத்தாட்சிகளை பற்றி அன்னார் கூறும்போது:

**ஆகவே, பார்வையும் மழுங்கி;சந்திரனின் ஒளியும் மங்கி;சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்க்கப்பட்டுவிடும்போது.{ திருகுரான் 75:7-10}**

**வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன்.கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வரும் முன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும் (பைபிள்பழைய ஏற்பாடு JOEL 2:30-31)**

**கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வரும் முன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும் (பைபிள் புதிய ஏற்பாடு ACTS 2:20)**



# இரத்த சந்திரன்

## இறைவனின் மாபெரும் அத்தாட்சி

திருக்குர்ஆன்,பைபிள் மற்றும் மற்ற இறைவேதங்களும் இந்த நிகழ்வுகள் பூமியில் இறைவனால் தேர்தெடுக்கப்பட்ட தூதர் உங்களிடையே உள்ளார் என்பதை முன்னறி விக்கின்றது. நான் எனது நாட்டின் **இந்துக்கள் மற்றும் தமிழர்களிடம்** எனது வருகையை பற்றி உரையாற்றும் போது,மேலும் முக்கியமாக அவர்களின் முக்கிய பண்டிகையான தீபாவளியின் போதும் இந்த நிகழ்வுகள் தோன்றியது, இன்னும் சில நிகழ்வுகள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் மட்டுமே நிகழக்கூடியவை. மேலும் 01.09.2016 அன்று மிக நீண்ட சூரிய கிரகணம் ஏற்பட்டது. மேலும் இதற்கு பிறகு இந்த நிகழ்வு 2200 ஆண்டிற்கு பிறகே நிகழும்.

:இந்த நிகழ்வுகள் 2014 -2015 ல் சரியாக யூதர்களின் புனித நாட்களில் தோன்றியுள்ளது.மேலும் இந்த அத்தாட்சிகள் இறை வஹீயை பெறக்கூடிய ஒரு தூதர், ஒரு மார்க்க சீர்திருத்தவாதி, ஒரு கலீஃபதுல்லாஹ் (தோன்றி) உள்ளார் என்பதை பூமிக்கு உணர்த்துகின்றது, இன்னும் இவர்களின் வருகையை பற்றி நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நூற்றாண்டும் ஒரு மார்க்க சீர்திருத்தவாதி தோன்றி இந்த மார்க்கத்திற்கு புத்துயிர் வழங்குவார் என்று முன்னறிவித்துள்ளார்கள். நபி (ஸல்) அவர்களின் உம்மத்தில் தோன்றும் இவர்கள் புதிய ஷரீயத்தை கொண்டு வருவதில்லை; மாறாக இந்த உண்மை மார்க்கம் எப்போதெல்லாம் மார்க்க சீர்கேட்டையும் , திருக்குர் ஆனிற்கு மாற்றமான கொள்கையையும் கொண்டு பாதிக்கப்படும் போது இறைவனின் அருளாக இவர்கள் தோன்றி உங்களுக்கு எச்சரிக்கை செய்கின்றனர். இது இறுதிநாள் வரைத் தொடரும். இவ்வாறு தோன்றும் இவர்களால் இறைவன் தனது திருக்குர்ஆனின் போதனைகளை பாதுகாக்கின்றான் ([ஆதாரம் HQ, 15: 10, Five Volume Commentary on the Holy Qur'an(tafseer-e-Kabir), Volume III, pp. 1265-66].

மேலும் அவர்கள் அக்காலத்தின் இமாம்களாகவும், நபி (ஸல்) அவர்களது ஷரீஅத்துடைய கிலாஃபத்தின் கலீபாக்களாகவும் தோன்றுகின்றனர். நபி (ஸல்) அவர்களின் உம்மத்தில், முதல் நூற்றாண்டின் மார்க்க சீர்திருத்தவாதி உமர் பின் அப்துல் அஸீஸ்(ரஹ்) அன்னாரிலிருந்து தொடங்கி பதினான்காம் நூற்றாண்டின் மார்க்க சீர்திருத்தவாதியும், வாக்களிக்கப்பட்ட மஹ்தியும் மஸூஹூமான ஹஜ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது(அலை) அவர்கள் தோன்றியுள்ளனர் .அன்னார் நபி (ஸல்) அவர்களின் கிலாஃபத்தைப் பற்றி கூறும்போது; பதிமூன்றாம் நூற்றாண்டின் மார்க்க சீர்திருத்தவாதி ஸயீத் அஹமத் பரேல்வி (ரஹ்) அவர்கள் முஹம்மதிய்ய கிலாஃபத்தின் 12 வது கலீஃபா என்றும், அன்னார் (தன்னை) இஸ்லாத்தின் 13 வது கலீஃபா என்றும் மிகத் தெளிவாக கூறியுள்ளார்கள்(ஆதாரம்: ரூஹானி கசாயின் - உருது, தொகுதி17 பக்கம் 193)

இதை விளக்குவதென்றால் ஹஜ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஒருவர் உங்களுக்கு பிறகு மார்க்க சீர்திருத்தவாதி வருவார்களா? என்று கேட்டார் அதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை )அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள் :-"

எனக்கு பிறகு ஒரு மார்க்க சீர்திருத்தவாதி வருவதில் என்ன தவறு இருக்கின்றது? மூஸா (அலை) அவர்களின் கிலாஃபத், ஈஸா(அலை)அவர்களுடன் முடிந்தது; **ஆனால் நபி (ஸல்) அவர்களின் கிலாஃபத், கியாமத் வரை தொடரும்**; எனவே ஒன்றுக்கு பின் ஒன்றாக முஜத்தித்கள் வருவார்கள். ஒருவேளை கியாமத்து நாள் நீட்டிக்கப்பட்டாலும் அதற்கும் ஒருவர் தோன்றுவார். நாம் ஒருபோதும் இறைநேசர்களும், புனிதர்களும் வருவதை ஏற்றுக்கொள்ளாமல் விடமுடியாது; அப்போது திடீரென்று மறுமை தோன்றும். ( Malfoozat, Volume 7, Page 119)

**முஹம்மதிய்ய கிலாஃபத்தின் 12 வது கலீஃபா என்றும், அன்னார் (தன்னை) இஸ்லாத்தின் 13 வது கலீஃபா என்றும் மிகத் தெளிவாக கூறியுள்ளார்கள்**

**மேலும், எனக்குப் பிறகு வரும் மஸீஹ், நபி (ஸல்) அவர்களின் ஹதீஸை வைத்து வாதம் செய்வார். (ஆதாரம்: உருது ரூஹானி கசாயின் , தொகுதி 3 பக்கம் 379)**



**இன்ஷாஅல்லாஹ் தொடரும்......**

# ஆட்சேபனை கேள்விகளுக்கு பதில்

ஸஹிப் அல் ஃபரஜ் -காஜாமைதீன் சலீம் சாஹிப் அவர்கள்

## ஆட்சேபனை-1:- அல்-கலீஃபதுல்லாஹ் முனீர் அஹ்மத் (அலை) அவர்கள் அன்னாரது வருகையை திருகுரான் மற்றும் நபி (ஸல்) அவர்களின் வாக்குறுதிப்படி வாதம் செய்யவில்லை!

அல்-கலீஃபதுல்லாஹ் முனீர் அஹ்மத் (அலை) அவர்கள் அன்னாரது வருகையை திருகுரான் மற்றும் நபி (ஸல்) அவர்களின் வாக்குறுதிப்படி வாதம் செய்யவில்லை என்பது முற்றிலும் தவறான கருத்தாகும் மேலும் இதைப்போன்ற ஆட்சேபனைகளையே ஹஸ்ரத் மிர்சா குலாம் காதியானி (அலை) அவர்களின் மீது முன்சென்ற சமுதாயங்கள் வைத்தன இப்பொது இந்த சமூகம் செய்கின்றது!

அன்னார் தனது வருகையை பற்றி கூறும்போது

**...ஹிஜ்ரி 1400 லிருந்து 20 அல்லது 30 வருடங்களை கூட்டிக்கொள்ளுங்கள் அப்போது உங்களிடையே மஹதி தோற்றுவார்....**

**(**ஆதாரம்: Qalda bin Zayd bin Baraka, Qalda bin Zayd bin Baraka, Asma Masalik Li Ayyam Al-Mahdi: Malik Li Kul Al-Dunya Bi Amr Allah El-Malik, p.216))

மேலும் இந்த ஹதீதின் அறிவிப்பாளர் அபூ ஹுரைரா(ரலி)ஆவார்கள் மேலும் இந்த நபிமொழி பற்றி கலீஃபத்துல்லாஹ் (அலை) அவர்கள் கூறும்போது:-- நபி (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு எனது வருகையை உறுதி செய்கின்றது நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின் படியும் இறைநேசர்கள் கருதுபடியும் மஸீஹ்ஹின் காலம் ஹிஜ்ரி 1300க்கு பிறகு என்பதை அறியலாம் மேலும் இதை உறுதிசெய்ய





நான் இந்த விதையை என் கையால் விதைப்பவராக வந்துள்ளேன்

நபி (ஸல்) அவர்கள் உரைநிகழ்த்தும் போது:

**"நான் முதன்மையாகவும் எனக்கு பிறகு மத்தியில் 12 கலீபாக்களும் இறுதியில் மஸீஹ்ஹும் தோன்றுவர்கள் என்று முன்னறிவித்துள்ளார்கள்"(**ஆதாரம்: Fashul Khitab Iman Muhammad p.768).

இது மிக தெளிவாக நபி (ஸல்) அவர்களின் நூற்றாண்டிற்கு பிறகு நூற்றாண்டுகளில் கலீபாக்களும் ,அதாவது முஜத்திதுகளும் பிறகு இறுதியாக 14 ஆம் நூற்றாண்டில் மஸீஹ்ஹீன் காலம் என்பதாகிறது.

இதையே மஸீஹ் (அலை) அவர்களும் தன்னை இஸ்லாத்தின் 13 வது கலீபா 14 ஆம் நூற்றாண்டில் தோன்றியுள்ளார் அவர் பெயர் "வாக்களிக்கப்ட்ட மஸீஹ்" என்று கூறியுள்ளார்கள்(ஆதாரம்: உருது ரூஹானி கசாயின் பாகம் 17 பக்கம் 193)

சூரத்துல் ஜுமுஆவில் உருவகமாக கூறப்பட்ட நபி (ஸல்) அவர்களின் இரண்டாவது வருகைக்கான மஸீஹ்மார்களின் வருகை **ஒருவரல்ல பலர்** என்பதை மிக தெளிவாக அறியலாம் (ஆதாரம்: ஸஹீஹ் புகாரி அத்தியாயம்:65 திருகுரான் விரிவுரை ஹதீத் எண்:4897&4988)

# ஆட்சேபனை கேள்விகளுக்கு பதில்

இதை வாக்களிக்கப்பட்ட முதல் மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றும் மிக தெளிவாக உறுதி செய்கின்றது(ஆதாரம்: (Roohani Khazain vol.3, p.379) (Roohani Khazain vol.3, p.379); Izala-e-Auham, Roohani Khazain Vol.3 p.197; Izala-e-Auham, Roohani Khazain Vol.3 p.251)

அன்னார் கூறும்போது எனக்கு முன்னால் பல மஹ்திகள் தோற்றியுள்ளார்கள் என்றும் எனக்கு பிறகு பல மஹ்திகள் தோன்றுவார்கள் என்றும் முன்னறிவித்துள்ளார்கள்

ஆனால் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவித்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ்ஹில் முதன்மை யானவர் ஹஸ்ரத் மிர்சா குலாம் காதியானி (அலை) அவர்கள் இதற்கு முன்னால் உள்ளவர்கள் வாக்களிக்கப்பட்டவர்களாக அதாவது அவர்களை பற்றி எந்த ஒரு முன்னறிவிப்பும் ஹதீதில் இருக்காது இதன் அர்த்தம் **வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறுதியானவர்கள் அல்ல** மாறாக அன்னார் முஹம்மதிய மஸீஹ் மார்களின் வருகையின் கதவை திறப்பதற்காக வந்துள்ளார்கள் என்று அல்-கலீஃபதுல்லாஹ் முனீர் அஹ்மத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் (ஆதாரம்: http://sahih-al-islam.blogspot.com/2013/03/the-elixir-of-truth-in-divine-prophecies.html)

அன்னார் இதை மேலும் சிறந்த முறையில் விளக்கியுள்ளார்கள் அதாவது நபி (ஸல்) அவர்களும் மஸீஹ் (அலை) அவர்களும் கூறும் போது **இமாம்களை பற்றி அறியாதவர்களின் மரணம் அறியாமையின் மரணம் என்றும்** (ஆதாரம்:Page 96 vol. 4 Musnad Ahmad. This [Hadith] is also recorded by Ahmad, Tirmidhi, Ibn-e-Khuzaimah and Ibni Habban. Al-Harith Al-Ashari )

இந்த இமாம்களின் தேவை ஒவ்வொரு நூற்றாண்டும் உள்ளது என்றும் நமக்கு அறிவுறுத்தியுள்ளார்கள்(ஆதாரம்:ஆங்கில புத்தகம் The need of Imam பக்கம் 05)

மேலும் சிந்திக்கவேண்டிய விசயம் என்ன வென்றால், நபி (ஸல்) அவர்களின் முன்னறி விப்பின் படி ஈஷா இப்னு மரியம் உங்களிடையே இமாம்மாக உங்களிலிருந்து உங்களுக்காக தோன்றும்போது உங்கள் நிலை எவருக்கும் என்பதாகும் ( முஸ்லீம் )

மேலும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் அவர் ஒரு இமாம் என்பதை நாம் அறிந்ததே,எனவே ஹஸ்ரத் மிர்சா குலாம் அஹமத் (அலை) அவர்கள் முஸ்லீம் உம்மத்திற்கு இமாம்மாக பதினான்காம் நூற்றாண்டில் தோன்றி வாக்களிக்கப்பட்ட மஸீஹ்ஹீன் கதவை திறத்துள்ளார்கள் அதைத்தான் அன்னார்“

**"நான் இந்த விதையை என் கையால் விதைப்பவராக வந்துள்ளேன் என்று நமக்கு போதித்துள்ளார்கள்**” (ஆதாரம் :Tadhira-tus-Shahadatain, pp. 64-65)

மேலும் அன்னாரின் ஜமாஅத் எப்போது **நபி (ஸல்) அவர்களின் கிலாபாத்தில் நூற்றாண்டின் இமாம்களின் தேவை என்ற உயிர் கருத்தை இழந்து நிற்கும்போது** அந்த ஏக இறைவன் அவனது மாபெரும் அருளால் ஆம் நூற்றாண்டில் இமாம்மாக **“ரூஹுல் குதூஸ்”**உடன் என்னை அன்னாரின் ஜமாத்தி லிருந்து எழுப்பியுள்ளான்,மேலும் அன்னார் முதலில் குறிப்பிட்ட நபி (ஸல்) அவர்களின் ஹதீத் எனது வருகையை மிகவும் குறிப்பாக 15 ஆம் நூற்றாண்டை முன்னறிவிக்கின்றது என்றும்

**இமாம்களின் தேவை ஒவ்வொரு நூற்றாண்டும் உள்ளது-மஸீஹ் (அலை)**



# ஆட்சேபனை கேள்விகளுக்கு பதில்




**தூயவர்களிலிருந்தும், தீயவர்களை வேறு படுத்திக் காட்டாத வரையில் நீங்கள் இருக்கும் நிலையிலேயே நம்பிக்கையாளர்களை இறைவன் விட்டு வைக்க மாட்டான். அல்லாஹ் உங்களுக்கு மறைவானதைப் பற்றி ஒரு போதும் அறிவிக்க(வும்)மாட்டான். ஆனால் அல்லாஹ் தனது தூதர்களிலிருந்து, தான் நாடிய வரைத் தேர்ந்தெடுத்துக்கொள்கிறான். எனவே நீங்கள் அல்லாஹ் விடத்தும், அவனுடைய தூதர்களிடத்தும் நம்பிக்கை கொள்ளுங்கள். நீங்கள் நம்பிக்கை கொண்டு இறையச்சத்தை மேற்கொள்வீர்களாயின், உங்களுக்குப் பெரும் நற்பலன் கிடைக்கும். (திருகுரான் 3:180)**

நம்பிக்கைகொண்டோர் என்று கூறுபவர்களே! நான் உங்களுக்கு ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகின்றேன், மேற்குறிய திருமறை வசனத்திலிருந்து நன்மையும் தீமையும் ஒன்றாக கலந்துள்ள நிலையில் இஸ்லாம் மிகவும் பலகீன மடைகின்றது,இந்த நிலையில் தொடர அந்த ஏக இறைவன் ஒருபோதும் அனுமதிப்பதில்லை. அவன் நிச்சயமாக தன் நபிமார்களை அனுப்பி நன்மையையும் தீமையையும் பிரித்தேயவான், மேலும் இன்று வரை நன்மை என்பது எது என்பதன் இரகசியத்தையும் அதை எவ்வாறு அவன் தூதரை கொண்டு பிரிப்பான் என்பதையும் அவனுக்குள்ளே வைத்து ள்ளான்.மேலும், இந்த பணிக்காக உங்களுக்கிடையில் இறைச்சம் கொண்ட ஒருவரை அவனே தேர்வு செய்து அவர்முலமாக அவன் பிரிப்பான். எனவே, நம்பிக்கை கொண்டோர்களே!

## “அல்லாஹுமீதும் அவன் தூதர் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள்”

(ஆதாரம் :http://sahih-al-islam.blogspot.com/2016/01/why-divinely-elected-imam-now.html)

என்றும் வாதம் செய்கின்றார்கள் எனவே சகோதரர்களே அன்னார் திருகுரான் மற்றும் ஹதீதின் அடிப்படையில் வாதம் செய்யவில்லை என்பது அடிப்படை ஆதாரமில்லாத குற்றச்சாட்டாகும்

# ஆன்மீக சிந்தனைக்கு புத்துணர்ச்சி வழங்கும் முத்தான பத்து கேள்விகள்

## வினாடிவினா- பரிசு கேள்வி

1. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) பெற்ற முதல் வஹீ என்ன?

2. நபிமார்கள் அல்லாதவர்க்கும் வஹீ வரும் என்று எந்த திருகுர்ஆன் வசனம் கூறுகிறது?

3. நல்ல கனவுகள் இறைவஹீயில் எத்தனை பங்கு என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்

4. ஒருவரின் துஆக்கள் ஏற்றுக்கொள்படுவது அல்லது அழகிய கனவுகள் வருவது அல்லது வஹீவருவதாக இருந்தாலும் நபிமார்களுக்கும் இறங்கும் தூய வஹீக்கும் உள்ள வித்தியசத்தை குறித்து ஹஜ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறும் உவமை என்ன?

5. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்சா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் இஸ்லாமிய கிலபாத்தின் --------வது கலீஃபா

6. இஸ்லாமிய கிலபாத்தின் 12 வது கலீஃபா யார்?

# ஆன்மிக சிந்தனைக்கு புத்துணர்ச்சி வழங்கும் முத்தான பத்து கேள்விகள்

## வினாடிவினா- பரிசு கேள்வி

7 மஸீஹ் (அலை) அவர்கள் எந்த ஹிஜிரி ஆண்டில் அதாவது (பைபிளின் குறிப்பிட்டது போலவே) தனக்கு வஹீ இறங்க ஆரம்பித்ததாக "ஹக்கத்துல் வஹீயில்" குறிப்பிட்டுள்ளார்கள்

8 ஹஸ்ரத் முஹையுதின் அல்-கலீபஃத்துல்லாஹ் முனீர் அஹ்மத் அஜீம் (அலை) அவர்களுக்கு அன்னாரின் எந்த வயதில் லிருந்து இறைவஹீ இறங்க ஆரம்பித்தது

9 ஹிஜ்ரி 1400 க்கு பிறகும் உங்களிடையே மஸீஹ் இருப்பார் என்ற நபி மொழியின் மூலநூலாகிய Qalda bin Zayd bin Baraka, Qalda bin Zayd bin Baraka, Asma Masalik Li Ayyam Al-Mahdi: Malik Li Kul Al-Dunya Bi Amr Allah El-Malik எந்த நாட்டில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது

10 ஹஜ்ரத் முனீர் (அலை) அவர்கள் பெற்ற முதல் வஹீ என்ன?

உங்கள் பதிலை எங்களுக்கு மின் அஞ்சல் மூலமாகவோ அல்லது கீழ்காணும் சமூக வலைத்தளம் மூலமாகவோ இன்ஷாஅல்லாஹ் அனுப்பவும்

jusai.tn@gmail.com

+917502272774



கலீஃபத்துல்லாஹ்

முனீர் அஹ்மது அஸீம் (அலை)

எனக்கு பணமோ பதவியோ தேவையில்லை. மனித குலத் திற்கு எச்சரிக்கை செய்வதர்க்கு அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ் என்னை அனுப்பி வைத்துள்ளான். அவனிடம் இருந்து கிடைக்கும் தூது செய்தியை எட்டவைப்பது மட்டுமே எனது பணி. நீங்கள் இதை ஏற்று கொண்டால் இம்மையிலும், மறுமையிலும் உங்களுக்கு நிம்மதியும் சாந்தியும் கிடைக்கும். அல்லாஹ்வின் இச்செய்தியை நீங்கள் புறக்கணித்தால், எனக்கும் உங்களுக்கும் இடையில் அவனே போதுமானவன்.

இன்று முதல் நான் அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் சாட்சியாக கூறுகின்றேன், நானே இந்த நூற்றாண்டின் முஹையதீன் ஆவேன்.